Saturday
# மெயில்
02 - 92
16-07-2011
பக்கங்கள்: 24
விலை: 15/=
සැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
16 JUL 2011
PERIODICALS DIVISION



# மரணத்தை வெல்ல முடியும்?

அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைக்கல் ஜாக்சனின் அக்காவை டைசனுக்கு விற்க முயன்ற கணவன்

என்னுடன் இன்பம் அனுபவிக்க ஒரு இலட்சம் டொலர் பணம் தருமாறும் அப்படித் தந்தால் என்னுடன் இன்பமாக இருக்கலாம் என்றும் குத்துச் சண்டை வீரர் மைக் டைசனிடம் தனது முன்னாள் கணவர் ஜேக்கோர்டன் பேரம் பேசியதாக மறைந்த மைக்கல் ஜாக்சனின் மூத்த சகோதரியான லாடோயா கூறியுள்ளார்.



ஜேக் கார்டனை விட்டு நீண்ட காலத்திற்கு முன்பே பிரிந்து விட்டார் லாடோயா. கார்டனும் ஏற்கனவே இறந்துவிட்டார். இந்த நிலையில் கோர்டனிடம் தான் பட்ட சித்திரவதைகள், கொடுமைகளை ஸ்டார்ட்டிங் ஓவர் என்ற தனது சுயசரிதையில் விளக்கியுள்ளார் லாடோயா.

அதில் அவர் கூறுகையில்; எனது கணவரிடம் நான் பட்ட சித்திரவதைகளை விபரிக்க வார்த்தைகள் இல்லை. என்னை மைக் டைசனிடம் விலை பேசியவர் கோர்டன். ஒரு இலட்சம் டொலர் கொடுத்தால் என்னுடன் இன்பமாக இருக்கலாம் என டைசனிடம் கூறினார் அவர்.இதை மைக்டைசன் எனது தாயார், தந்தை மற்றும் எனது நண்பர்கள் சிலரை அணுகி கோர்டன் இப்படிப் பேசியதாக கூறினார். அதன் பிறகே கோர்டனின் கொடூர மனம் எங்களுக்குப் புரிய வந்தது.

பிளேபாய் பத்திரிகைக்கு நான் இரண்டு முறை ஆபாசமான கோலத்தில் போஸ் கொடுக்கவும் கோர்டன் கொடுத்த நிர்ப்பந்தம் தான் காரணம். என்னை ஒரு விபசாரியாகவே அவர் மாற்றி வைத்து விட்டார்.எல்லா அசிங்கத்திலும் என்னை அவர் தள்ளி விட்டார். எனக்கு எதிராக எல்லாமே இருக்குமாறு பார்த்துக் கொண்டார் என்று கூறியுள்ளார் லாடோயா.




# சீனாவின் பயம்

சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வயது 90. இந்தத் தொண்ணூறில் 62 ஆண்டுகள் அங்கே அதுதான் ஆளுங்கட்சி. இவ்வளவு இருந்தும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு பயம் இருந்து கொண்டுதானிருக்கிறது. சோவியத் நாட்டில் கம்யூனிஸம் தோற்று சின்னாபின்னமாகிவிட்டதுபோல சீனாவிலும் ஆகிவிடக்கூடாதே என்ற பயம்.

ஒரு காலத்தில் சீனா கம்யூனிஸ்ட் நாடாக இருந்தது என்று சொல்லும்படியான நிலையேற்படக்கூடாது என்று மகா எச்சரிக்கையாக இருக்கிறது சீன அரசு. 1991 இல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி 74 ஆண்டுகள் பதவியிலிருந்தபிறகு நொறுங்கிப்போனது. அது சீனாவுக்கு ஓர் எச்சரிக்கை மணியாக அமைந்தது. சீனாவில் பணக்காரனுக்கும் ஏழைக்கும் இடையேயுள்ள இடைவெளி எவ்வளவு விரைவில் குறைக்கப்படுகிறதோ அவ்வளவு நல்லது அந்நாட்டு கம்யூனிஸ்ட் கட்சிக்கு.

அடுத்த ஆண்டு சீனத் தலைமையில் பெரும் மாற்றங்கள் நிகழவிருக்கின்றன. அதிபர் ஹூ ஜின்டாவும் பிரதமர் வென் ஜியாபோவும் மற்றும் ஏராளமான தலைவர்களும் இரண்டுமுறை பதவி வகித்தாயிற்று போதும். இளைய தலைவர்களுக்கு வழிவிடுவோம் என்று பதவி ஓய்வு பெறப் போகிறார்கள். துணை அதிபர் ஜி ஜின்பிங் அதிபராகும் வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. மா ஸே துங்கிற்குப் பிறகு பதவிக்கு வந்த டெங் ஸியோ பிங் தொடங்கிய பொருளாதாரச் சீர்திருத்தங்களைத் தொடர வேண்டுமென்று சீன கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து மக்கள் எதிர்பார்த்தாலும் அது அமைதியின்மையை ஏற்படுத்தலாம். அதிருப்தியை அதிகப்படுத்தலாம் என்ற ஒரு வகை பயமும் நிலவிக் கொண்டிருக்கிறது.

உள்ளூர் கலவரம் ஏதேனும் உருவாகக் கூடுமோ என்ற கலவரத்தில் 90 பில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது எதற்காக? பாதுகாப்புப் படைகளைப் பலப்படுத்த வேண்டும். பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக.

---

## மரணத்தை...


நூறாவது பிறந்தநாள் கொண்டாட வேண்டுமென்கிற ஆசை நிறையப் பேருக்கு இருக்கும். ஐநூறு வயது, ஆயிரம் வயது வாழ யாருக்கு ஆசை வரும்? கனவிலும் சாத்தியமில்லை என்று மூளை தடைபோடும். விரைவில் அது சாத்தியமாகுமென விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

மரணத்தைத் தடுத்து நிறுத்தும் சாதனையை நிகழ்த்த முடியும் என்று நம்பும் ஒரு கூட்டம் எப்போதும் இருந்திருக்கிறது. வைத்தியர்,ஜோதிடர், மந்திரவாதி துணையோடு எமனைத் தோற்கடிக்க எத்தனையோ மன்னர்கள் முயற்சி செய்திருக்கிறார்கள். இன்றும் பல நாடுகளில் ஆராய்ச்சிகள் நடக்கின்றன. அத்தகைய ஒரு சோதனைக் கூடத்தின் நிறுவனர் கிரே என்பவர் அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் முதுமையை கட்டுப்படுத்தக்கூடிய வழிகளை டாக்டர்கள் அறிந்துகொண்டிருப்பார்கள் என்கிறார் இவர்.

முதுமையில் ஏற்படும் நோய்களால் மரணம் ஏற்படுகிறது. அந்த நோய்களை அடக்கினால் முதுமையைக் கட்டுப்படுத்தலாம். அதன் பிறகு கார் ஏர்கண்டிஷனர் போல உடலை திருத்தம் செய்வதற்காக அவ்வப்போது டாக்டரிடம் போனால் போதும். ஜீன் தெரபி,ஸ்டெம்செல் தெரபி போன்ற நவீன சிகிச்சைகளால் உடலின் அனைத்து உறுப்புகளையும் சரியான நிலையில் இயங்க வைக்கலாம். உடலின் மூலக்கூறுகள் நாள் போக்கில சேதமடைபவை. அது ஆண்டுக்கணக்கில் நீடிக்கும்போது நோயாக மாறுகிறது. அந்தக் கட்டத்துக்கு முன்னரே ரிப்பேர் செய்தால் முதுமையைத் தவிர்க்கலாம் என்பது கிரேயின் கருத்து.

மருத்துவ முன்னேற்றத்தால் ஒவ்வொரு ஆண்டும் மூன்று மாதங்கள் வீதம் மனிதனின் சராசரி ஆயுட்காலம் அதிகரித்து வருகிறது. செஞ்சுரி அடித்தவர்கள் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டில் பத்து இலட்சத்தை எட்டுமென ஆய்வுகள் கணிக்கின்றன. இந்த வேகத்தில் போனால் கிரேயின் எதிர்பார்ப்பு உண்மையாக வாய்ப்புண்டு. ஆனால், பல நூற்றாண்டுகள் வாழ மனிதன் தயாரா என்பதுதான் கேள்வி. நேற்று இருந்தார் இன்று இல்லை என்கிற பெருமை படைத்தது இந்த உலகம் என்பது வள்ளுவர் வாக்கு. அது பொய்த்தால் பூமியில் காட்சிகள் எப்படியெல்லாம் மாறும் என்று கற்பனை செய்து பாருங்கள். உடல் நடுங்கும். வந்தவர் எல்லாம் தங்கிவிட்டால் இந்த மண்ணில் நமக்கு இடமேது என்ற கண்ணதாசன் வரிகளை கிரே கேட்டிருக்க வாய்ப்பில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெனாசிர் என் காதலியா?

எனக்கும் பெனாசிர் பூட்டோவுக்கும் இடையே காதல் இருந்ததில்லை அதே சமயம் எனது ஒன்று விட்ட சகோதரர் ஒருவர் பெனாசிரை நேசித்தார் அதேபோல் பெனாசிரும் அவரை நேசித்தார்.திருமணப் பேச்சுக்கள் கூட கிளம்பியது இருப்பினும் அது பின்னர் கை நழுவிப் போனது என்று கூறியுள்ளார் பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் கப்டனும் தற்போதைய அரசியல்வாதியுமான இம்ரான்கான்.

ஒரு காலத்தில் பிளேபோய் ஆகவிருந்தவர் இம்ரான். உலகின் பல்வேறு பிரபலங்களுடன் இணைந்து அவர் கிசுகிசுக்கப்பட்டுள்ளார்.அதேபோல் அவருக்கும் மறைந்த பிரதமர் பெனாசிர் பூட்டோவுக்கும் இடையே காதல் இருந்ததாக ஒரு செய்தி முன்பு வெளியானது.

இம்ரான் கானின் சுயசரிதையை எழுதிய இங்கிலாந்தைச் சேர்ந்த கிறிஸ்டோபர் என்பவர்.1970 ஆம் ஆண்டு இம்ரான் கான் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் படித்தார்.அப்போது பெனாசிரும் அங்கு படித்தார். அந்த சமயத்தில் இம்ரான் மீது பெனாசிருக்கு ஈர்ப்பு ஏற்பட்டது.இருவருக்கும் இடையே செக்ஸ் உறவும் கூட இருந்தது .இது இம்ரானின் தாயாருக்கு தெரியவரவே அவர் திருமணம் நடத்தி வைக்க முயன்றார். ஆனால்,அது கை கூடவில்லை என்று கூறியிருந்தார்.

இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் இந்தத் தகவலை உடனடியாக இம்ரான் கான் மறுத்தார்.இந்த நிலையில் இன்னொரு இம்ரான் கான் சுயசரிதை வெளியாகியுள்ளது.இதை இந்தியாவைச் சேர்ந்த பிராங்க் ஹூசூர் என்பவர் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக ஹூசூரிடம் இம்ரான் கான் கூறுகையில்;

எனக்கும் பெனாசிருக்கும் இடையே இருந்தது பரஸ்பரம் அன்புதான் இருவருக்கும் இடையே இருந்தது. அது மட்டுமே வேறு எதுவும் இல்லை. இருவரும் நல்ல அன்பு வைத்திருந்தோம் நல்ல நண்பர்களாக இருந்தோம்.

பெனாசிர் எனது தனிப்பட்ட தோழி என்னை அவர் மிகவும் மதித்தார் எனது உள் உணர்வுகளை மதித்தார்.அதேசமயம் எனது ஒன்று விட்ட சகோதரர் ஒருவருக்கு பெனாசிர் மீது ஈர்ப்பு இருந்தது.அவரை நான் பெனாசிருக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன் அதன் பின்னர் பெனாசிருக்கு கூட அவர் மீது ஈர்ப்பு ஏற்பட்டது.திருமணப் பேச்சுக்கள் கூட எழுந்தன ஆனால் அது கை கூடவில்லை.

அவருக்கு அரசியல் மீது ஈர்ப்பு இருந்ததில்லை.ஆனால் அரசியல் அவரைத் தேடி வந்தபோது அதற்கேற்றபடி மாறிக் கொள்ள அவரால் முடிந்தது. பாகிஸ்தானின் மிகப் பெரிய தலைவராக அவர் திகழ்ந்திருக்க வேண்டியவர்.துரதிர்ஷ்டம் அவரை துரத்திக் கொண்டு வந்ததால் அது முடியாமல் போய் விட்டது.இடி முழக்கம் போல பேசக் கூடியவர் பெனாசிர் அது எல்லோருக்கும் கிடைக்காத ஒன்று அவரிடம் அது இருந்தது.தனது பேச்சால் அத்தனை பேரையும் கட்டிப் போடும் திறமை படைத்தார் பெனாசிர் என்று கூறியுள்ளார் இம்ரான்.

கிறிஸ்டோபர் சேன்ட்போர்ட் என்ற அந்த புத்தகாசிரியர் இம்ரான் கான் குறித்து எழுதிய நூலில் பெனாசிர் பூட்டோவும் இம்ரான் கானும் ஒக்ஸ்போர்ட்டில் இணைந்து படித்த போது இம்ரான் மீது காதல் வயப்பட்டார் பெனாசிர் இம்ரானை அவர் தீவிரமாக காதலித்தார்.இம்ரானும் பெனாசிரைக் காதலித்தார்.

இருவருக்கும் மிக மிக நெருக்கமாக பழகினர்.இருவருக்கும் இடையே நல்ல உறவும் ஏன் செக்ஸ் உறவும் கூட இருந்தது.இவர்களின் காதலை அறிந்த இம்ரான் கானின் தாயார் இருவருக்கும் திருமணம் செய்து வைக்கக் கூட முயன்றார். ஆனால், அது கை கூடவில்லை.

பூட்டோவுக்கு 21 வயதாக இருக்கும்போது அவர் லேடி மார்கரெட்ஹோலில் 2 ஆவது ஆண்டு படித்து வந்தார்.1975 ஆம் ஆண்டு இம்ரானை அவர் சந்தித்தார்.இம்ரான் கானைப் பார்த்ததுமே அவருக்கு காதல் வந்துவிட்டது.இம்ரானை அவர் லாகூர் சிங்கம் என்றுதான் அழைப்பார்.

இருவரும் மிக நெருக்கமாக பழகி வந்தனர்.குறுகிய காலமே இவர்களுக்குள் பழக்கம் இருந்தது.இருந்தாலும் பல்கலைக்கழக வட்டாரத்தில் இவர்களின் காதல் வெகு பிரசித்தமாக இருந்தது.

மேலும் இவர்கள் இருவருக்கும் இடையே செக்ஸ் உறவும் இருந்தது என்று நம்பலாம். காரணம் இருவரும் அவ்வளவு நெருக்கமாக அன்னியோன்னியமாக பழகி வந்தனர்.இம்ரான் கான் யாரிடம் எல்லாம் நெருக்கமாகப் பழகுகிறாரோ அவர்களுடன் எல்லாம் உறவு வைத்துக் கொள்வார் என்று அவரது நெருங்கிய நண்பர்கள் சிலர் சொல்லியதை வைத்து இப்படிக் கூற வேண்டியுள்ளது என்று எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கையில் மாசடையும் நீர்



இலங்கையின் சூழற்பிரச்சினைகளில் நீர் மாசடைதல் முக்கியமானதாகும். இங்கு போதியளவான நீர்வளம் காணப்படுகின்ற போதிலும் அது விரைவாக மாசடைந்து வருவதால் நன்னீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது.

இலங்கைத் தீவானது ஆறுகள், குளம், குட்டைகள் ஆகிய மேற்பரப்பு நீர் நிலைகளையும் தரை கீழ் நீர் வளத்தையும் கொண்டிருக்கிறது. அதுமட்டுமன்றி *1585 km* நீளமான நீண்ட கடற்கரையோரத்தையும் கொண்டிருப்பதால் எமது நாடானது அளப்பரிய நன்மைகளைப் பெறுகின்றது. எனினும் பௌதீக, மனிதக்காரணிகளால் அவை விரைவாக மாசடைந்து செல்வது இன்று முக்கிய பிரச்சினையாக உள்ளது.


இலங்கையில் நீர்வளத்தை மாசுபடுத்தும் பிரதான காரணியாக உள்ளது நகரக் கழிவுகளாகும். இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 0.5 சதவீதமான பகுதியே நகரப் பகுதியாகக் காணப்படுகின்றது. குறிப்பாக கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் கழிவுகளை அகற்றுவது முக்கிய பிரச்சினையாக உள்ளது. குப்பைக் கூளங்கள், கைத்தொழில் கழிவுகள், வீட்டுப் பாவனைக் கழிவுப் பொருட்கள், நீர்க்கழிவுகள் என்பவற்றை அகற்றுவது பெரும் பிரச்சினையாக உள்ளது.



எமது நாட்டின் மொத்த சனத்தொகையில் 21.5 சதவீதமான மக்களே நகரப்பகுதி மக்களாவார்கள். எனினும் நீர்ப்பகுதிகளை அதிகளவில் மாசுபடுத்துவது நகரக் கழிவுகளேயாகும். 1981 களில் கொழும்பு மாநகரத்தில் காணப்பட்ட 1.4 மில்லியன் சனத்தொகையானது இன்று மிகவும் அதிகரித்து விட்டது. இதில் 7 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு குழாய் முறை மூலம் கழிவகற்றும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு பிரதேசத்தின் கழிவு நீரானது 2 பிரிவாக வெளியேற்றப்படுகிறது. அதில் கொழும்பின் 2100 ஹெக்டேயர் நிலப்பரப்பின் கழிவுநீர் நேரடியாக மாதம்பிட்டிய எனுமிடத்தில் களனி கங்கையினுள் கலக்கவிடப்படுகிறது. அதேபோன்று 1000 ஹெக்டெயர் நிலப்பரப்பின் நீர்க்கழிவுகள் தெஹிவளைக் கால்வாயினூடாக கடலினுள் விடப்படுகின்றது. தெஹிவளைக் கால்வாயூடாக தினமும் 67,500-90,000 கனமீற்றர் கழிவுநீர் கடலினைச் சென்றடைகின்றது. இதில் சேதனக் கூறுகள், நைத்தீரேற் உலோகக் கழிவுகள் என்பன காணப்படுகின்றன.

உலோகக் கழிவுகளில் காட்மியம் - *9ppb (part perbillion)*, செம்பு *11ppb*, ஈயம் *9ppb* ஆகியன காணப்படுகின்றன.



கொழும்பு நகரின் கைத்தொழில் கழிவுகள் மற்றும் சாக்கடை நீர்க்கழிவுகள் கொழும்புத் துறைமுகத்துக்கு அண்மையிலுள்ள முத்துவால் எனும் இடத்திலும் சென்.செபஸ்தியன் கால்வாயூடாக களனி நதியிலும் வெள்ளவத்தை, தெஹிவளை ஆகிய இடங்களில் கடலிலும் கலக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் அரைவாசிக்கும் அதிகமானோர் தாழ்நிலங்களிலேயே வசிக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் சேரிகளாவார்கள். அவர்களினால் போடப்படும் குப்பைக்கூளங்கள் கால்வாய்கள், நீரோடைகள் போன்ற மேற்பரப்பு நீருடன் கலந்து நீரை மாசுபடுத்துகின்றன. அண்மைக்காலக் கணிப்புகளின் படி 7 இலட்சத்திற்கும் அதிகமானோர் தமது குப்பைக்களை மேற்பரப்பு நீரில் போடுகின்றமை தெரியவந்துள்ளது.

கண்டி நகரத்தில் விவசாய, கைத்தொழில் கழிவுகள் மகாவலி நதியினுள் கலக்கின்றன. கண்டியில் 50-60 சதவீதமானவர்களே மலசலகூடங்களைப் பயன்படுத்துகின்றனர். ஏனையோர் ஆறுகள், வடிகால்கள் போன்றவற்றில் தமது கழிவுகளை சேர்க்கின்றனர். மகாவலி நதியின் ஆரம்பப்பகுதிகளிலேயே அதிகளவான கழிவுநீர் கொட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண நகரில் அதிகரித்து வரும் சனத்தொகை காரணமாக மலசலகூடங்கள் திட்டமிடப்படாத முறையில் அதிகளவில் அமைக்கப்படுவதனால் மலக்கழிவு நீரானது தரைகீழ் நீருடன் கலக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி யாழ்.நகரில் அமைந்துள்ள வைத்தியசாலை, விடுதிகள் போன்றவனவற்றிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது பண்ணைக் கடலினுள்ளும் குளங்களிலுள்ளும் விடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி இரத்மலானை, மொறட்டுவ பகுதிகளில் புடவை, அச்சுக்கூடக் கழிவுகள் நேரடியாகவே வடிகால்களினுள் விடப்படுகின்றன. களனி கங்கையினுள் அதிகளவான கைத்தொழில் கழிவுகள் கலக்கின்றன. கொழும்பு மாவட்டத்திலும் கம்பஹாவிலும் காரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் ரொக்ஸைட் உலோகக் கழிவுகள் குடிநீருடன் கலப்பதாகத் தெரியவந்துள்ளது. கடந்த சில மாதங்களில் கழிவுநீர் குடிநீருடன் கலத்தல், குடிநீரில் இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுதல் போன்றனவற்றை எதிர்த்து கொழும்பு நகரில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் நீர்வளத்தை மாசுபடுத்தும் பிறிதொரு காரணியாக விவசாயத்தில் பயன்படுத்தும் இரசாயன உரம், நச்சுக் கிருமிநாசினிகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். அநுராதபுரம், பொலநறுவைப் பகுதிகளில் அதிகளவான இராசயன உரப்பாவனையின் காரணமாக குடிநீரில் ஆசனிக் பதார்த்தம் காணப்படுவதுடன், அது சிறுநீரகக் கோளாறுகளுக்குக் காரணமாக அமைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.


அதுமட்டுமன்றி இலங்கையின் கடற்பகுதிகளில் விடப்படும் கழிவுகளால் அதிகரித்த மாசடைதல் இடம்பெறுகின்றது. மட்டக்களப்பு வாவியில் அதிகரித்த கழிவுகள் கலப்பதனால் அதில் வாழும் மீன்களில் ஒரு விதமான தோல்வியாதி காணப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே 'நீரின்றி அமையாது உயிர்' என்பதற்கேற்ப இயற்கையால் வழங்கப்பட்ட இந்நீர் வளத்தினை பேணிப்பாதுகாப்பது எமது தலையாய கடமை என்பதுடன் அதுவே உயிரின நிலைத்திருப்பிற்கு அவசியம் என்பது கண்கூடு.

த. கஜலக்ஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை மிரட்டும் துஷ்பிரயோகங்கள்



பெண்கள் மீதான வன்முறை இன்றைய சமூகத்தில் பற்பல வடிவங்களில் வெளிப்படுகின்றன. தொழிற்சாலைகளில்,அலுவலகங்களில், மருத்துவமனைகளில், பாடசாலைகளில்,பொது இடங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் இடம்பெறுகின்றன.

பெண்கள் சுதந்திரமாக வெளியில் சென்று தங்களது வேலைகளை பூர்த்தி செய்து வரமுடியாத நிலையே தற்போது ஏற்பட்டுள்ளது. உலகிலுள்ள பெண்களில் மூன்றில் ஒருவர் தமது வாழ்நாளில் ஏதாவது ஒரு விதத்தில் துஷ்பிரயோகத்திற்குள்ளாகி வருவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

குடாநாட்டிலும் கூட யுத்தம் முடிவடைந்ததற்குப் பின்னர் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. தற்போது குடாநாட்டில் சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துச் செல்வதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் தெரிவித்தார்.

பாடசாலைக்கோ, தொழில் நடவடிக்கைகளுக்கோ தினமும் பஸ்களில் பயணிப்போர் தொடர்ந்தும் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். பஸ் சாரதி, நடத்துநர் மட்டுமன்றி பஸ்ஸிலே பயணிக்கின்ற ஏனைய பயணிகளின் மோசமான செயற்பாடுகளினால் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளாகும் நிலை அதிகரித்துச் செல்கிறது.

அண்மையிலும் கூட, தினமும் நான்கில் ஒரு பெண்ணுக்கு தொல்லை ஏற்படுவதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. நாட்டில் பொது போக்குவரத்து சேவையை பயன்படுத்தும் நான்கு பெண்களில் ஒருவர் என்ற அடிப்படையில் தினமும் தொந்தரவுக்கு உட்படுகின்றனர்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் இந்த விபரம் கண்டறியப்பட்டிருப்பதாக போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹண திசாநாயக்க தெரிவித்தார்.

பஸ்கள், ரயில்களில் தினமும் அதிகளவு எண்ணிக்கையான பெண்கள் வாய் மூலம் மற்றும் உடல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதனால் பயணிகள் அண்மைக்காலமாக பொது போக்குவரத்தை பயன்படுத்துவதை குறைத்திருப்பதற்கு காரணமாக அமைந்திருக்கிறது.

பெண்களுக்கு அவர்களின் அடிப்படை உரிமைகள் வழங்கப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. பொதுமக்கள் போக்குவரத்துச் சேவை பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக பெண்களுக்கும் போக்குவரத்து தொடர்பான தனி உரிமைகளை வழங்கவுள்ளோம். பஸ்களில் எந்தவொரு தொந்தரவுகளுக்கும் பெண்கள் இலக்காகாத விதத்தில் சிறப்பான சேவையை வழங்குவதன் முக்கியத்துவம் குறித்து தனியார், இ.போ.ச.பஸ் சாரதிகளுக்கும், நடத்துநர்களுக்கும் அறிவூட்டல் வேண்டிய புதிய நிகழ்ச்சித் திட்டத்தையும் பயிற்சிப் பட்டறைகளையும் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அத்தோடு இத்தகைய திட்டங்கள் புகையிர சேவைக்கும் அறிமுகப்படுத்தப்படுமெனவும் பஸ்களில் பயணிப்போர் பல்வேறு தொந்தரவுக்குட்படுத்தப்பட்டால் 0117555555 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை தெரிவிக்கலாம்.

2009 இல் 56,590,210 பயணிகள் தனியார் பஸ்களில் பயணம் செய்துள்ளனர். 1,75,000 பயணிகள் இ.போ.ச.வைப் பயன்படுத்தியுள்ளனர். இந்த எண்ணிக்கை தற்போது வீழ்ச்சி கண்டுவருவதாகவும் இதனை நிவர்த்தி செய்ய பெண்களுக்காக சிறப்பான போக்குவரத்து வசதிகளை வழங்குவது தொடர்பாக நாங்கள் நடவடிக்கை எடுத்தால் அவர்களுக்கும் எந்தவொரு அச்சமுமின்றி பொது போக்குவரத்துச் சேவையை உபயோகிப்பர் எனவும் பிரதியமைச்சர் கூறியுள்ளார்.

பஸ்ஸில் அலுவலகம் செல்லும் போது தான் அனுபவிக்கும் சிரமங்கள் தொடர்பாக பெண் ஒருவர் கூறுகையில்;

'நான் தினமும் சிலாபத்திலிருந்து வெள்ளவத்தைக்கு பஸ்ஸில் வருகின்றேன். அங்குள்ள தனியார் வங்கியொன்றில் ஊழியராக பணியாற்றுகிறேன்.சரியாக 9 மணிக்கு அலுவலகத்திற்கு செல்ல வேண்டியுள்ளதால் வீட்டிலிருந்து அதிகாலையிலே வெளிக்கிடுவேன். கடந்த 6 வருடங்களாக இவ்வாறு பஸ்ஸில் அல்லது ரயிலிலே அலுவலகத்திற்கு வருவேன். ஆனால், முன்னைய காலங்களை விட தற்போது சேவையிலுள்ள பஸ் சாரதிகள், நடத்துநர்கள் பயணிகளுடன் மிகவும் மோசமான முறையில் நடந்து கொள்கின்றனர்.சில வேளையில் என்னிடம் பணம் வாங்கமாட்டார்கள். ஆனால், எனக்கு பக்கத்திலே வந்து நின்று தகாத முறையில் நடப்பார்கள். வெறும் வார்த்தைகளால் மாத்திரம் சொன்னால் விட்டுவிடலாம். தொட்டுக் கதைக்கிறார்கள்.நான் பஸ்ஸில் ஏறும்போதும் இறங்கும் போதும் சரியாக வாசலில் வந்து எனது முதுகைப் பிடித்து இறக்கிவிடுவார்கள். மோசமான முறையில் எனக்கு மாத்திரமின்றி என்னைப் போன்று பஸ்ஸில் பயணிக்கின்ற ஏனைய பெண் பிள்ளைகளுடனும் இவ்வாறு தான் நடந்து கொள்கின்றார்கள்.

இதனால், ஒவ்வொரு நாளும் அச்சத்துடன், சுதந்திரமற்றவளாக பஸ்களிலே பயணிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இவ்வாறு நடந்து கொள்வதை சில வேளைகளில் பஸ்ஸில் பயணிக்கின்ற பெரியவர்கள் கண்டாலும் ஒன்றும் சொல்லாமல் இருப்பார்கள். இந்த நிலையை மாற்றியமைத்து பெண்களுக்கான அனைத்து வசதிகளையும் போக்குவரத்து பிரிவினர் மேற்கொள்ளும் போது என்னைப் போன்று தினமும் பாதிக்கப்படுபவர்கள் மட்டுமன்றி எதிர்கால பெண்கள் சமூகத்திற்கும் நன்மை பயக்கக்கூடிய வகையில் அமையும் என்றார்.

இதேவேளை, பெண்கள் மீதான துஷ்பிரயோகம் அதிகரித்துக் காணப்படுவதற்கு வீட்டிலுள்ள பெரியோர்களின் சரியான வழிகாட்டலின்மையே காரணமென வைத்திய அதிகாரியொருவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் விளக்கமளிக்கையில்; அதே அடக்குமுறைகள், துஷ்பிரயோகம், தொந்தரவுகள் இன்னும் குறையவில்லை. தொடர் கதையாக நீண்டு கொண்டு போவதால் பெண்கள் மீது ஏற்படுத்தப்படுகின்ற துஷ்பிரயோகங்கள் சொல்லித் தீரப்போவதில்லை.இத்தகைய துஷ்பிரயோகத்துக்கு வீட்டிலுள்ள பெரியோர்கள் சரியான முறையில் அறிவுறுத்தல்களை வழங்காமல் வழிகாட்டலின்மையே முக்கிய காரணமாகும்.

பெற்றோர்கள் இயந்திரமயமாய் இயங்கிக் கொண்டிருப்பதால் தமது பிள்ளைகளுடன் மனம் விட்டுப் பேசி, அவர்களது உணர்வுகளை உணர்ந்து அதன்படி அறிவுரை சொல்ல முடியாமலுள்ளது. இதனால்தான் இளம் சமுதாயத்தினர் வழிதடுமாறுகின்றனர் குறிப்பாக இளம் பெண்கள் துஷ்பிரயோகத்துக்குள்ளாகும் நிலைமாறுவதற்கு எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதன்போதே பெண்கள் சுதந்திரமாக தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்றார்.

தொடர்ந்தும் பெண்களுக்கு ஏற்படுகின்ற துஷ்பிரயோகங்களை இல்லாதொழிப்பதற்காக அரசு திட்டமிட்டுள்ள செயற்பாடுகளை தாமதமின்றி முன்னெடுப்பதனாலும் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொள்ளவுள்ள பெண்களுக்கான விசேட செயற்பாடுகள் மூலமே பெண்கள் அச்சமின்றி பயணிக்க முடியும்.

எனவே வகுக்கப்பட்டுள்ள திட்டங்களை துரிதகதியில் முன்னெடுத்து சுதந்திரமான பெண்கள் சமூகத்தை உருவாக்க அனைவரும் முன்வர வேண்டும்.

எச்.ஹுஸ்னா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க சில ஆலோசனைகள்...

மருத்துவம்





உடலை வளமாக வைத்திருக்க வேண்டும் எனும் ஆர்வம் எல்லோரிடமும் காணப்படுவது இயல்பு.அப்படிப்பட்டவர்கள் இந்த பத்து வழிமுறைகளை கடைப்பிடிப்பது பயனளிக்கும்.

தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள். உடற்பயிற்சி என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் செய்வதல்ல.தினசரி அலுவல்களுக்கிடையே வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் உடற்பயிற்சி செய்யலாம்.படிகளில் ஏறி இறங்குவது,அடிக்கடி நடப்பது,கண்களுக்கு பயிற்சி கொடுப்பது,கைகால்களை நீட்டி மடக்குவது,மூச்சுப் பயிற்சி என எவ்வளவோ செய்யலாம்.

தினமும் மூன்று வேளை மூக்கு முட்ட அசைவப் பொருட்களை உடலுக்குள் திணிப்பதை கொஞ்சம் ஒத்தி வையுங்கள்.எல்லாம் அளவாய் இருப்பதே ஆரோக்கியமானது.தினமும் ஐந்து முறை காய்கறிகள் மற்றும் பழங்களை உண்ணுங்கள்.பெரும்பாலானவை வேக வைக்காததாக இருக்க வேண்டியது முக்கியம்.சில காய்கறிகள் பாதி வேக வைத்து உண்ணலாம்.சோர்வாய் இருக்கிறது ஒரு தேநீர் குடிப்போம் போரடிக்கிறது ஒரு தேநீர் குடிப்போம் நண்பர் வந்துவிட்டார் ஒரு தேநீர் குடிப்போம் என எதற்கெடுத்தாலும் தேநீர் அருந்துவதற்கு ஒரு முற்றுப்புள்ளி வையுங்கள்.தூய்மையான தண்ணீர்,எலுமிச்சை சாறு,செயற்கை இனிப்பு கலக்காத பழச்சாறு,கிரீன் டீ போன்றவற்றை அதற்கு மாற்றாக அருந்தப் பழகுங்கள்.

நல்ல பழக்கங்களைக் கொண்டிருப்பது முக்கியம்.குறிப்பாக புகைத்தலை முழுமையாய் விட்டு விடுங்கள்.மது அருந்துதல்,எதிர்மறை எண்ணங்களை வளர்த்தல் போன்ற அனைத்துமே உடலுக்கு ஊறு விளைவிப்பவை.எனவே நல்ல பழக்கங்கள்,நல்ல சிந்தனைகள் இவை முக்கியம்.மோசமான கொழுப்பு நிரம்பிய உணவுகளை தூரமாய் ஒதுக்குங்கள்.குறிப்பாக சீஸ்,சிப்ஸ்,பிரன்ச் பிரைஸ்,பீட்சா போன்ற அதிக கொழுப்பு உணவுகளை ஒதுக்கித் தள்ளுங்கள்.நலமான வாழ்வுக்கு உடல் எடை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.அதற்கு தேவையற்ற கொழுப்புப் பொருட்களை ஒதுக்குவது மிக மிக அவசியம்.

உணவில் உப்பு சேர்ப்பதை மட்டுப்படுத்துங்கள்.அளவுக்கு அதிகமான உப்பு உடலில் பல்வேறு நோய்களைக் கொண்டு வரும்.அதிகம் உப்பை உட்கொள்ளும்போது உடலில் சோடியம் அளவு அதிகரிக்கிறது.இது மினரல்களின் சமநிலையைப் பாதிக்கிறது.உயர் குருதி அழுத்தத்துக்குக் கூட இது காரணமாகி விடுகிறது.அதிக உப்பு ரொம்ப ரொம்ப தப்பு.என மனதுக்குள் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.உண்பதை நன்றாக மென்று உண்ணுங்கள்.அதிக நேரம் மென்று உண்ணும் பொருள் உங்கள் உடலுக்கு அதிக பயனளிக்கும்.தேவையற்ற கொழுப்பு சேர்வதிலிருந்தும் வாயுத் தொல்லை,செரிமானப் பிரச்சினை போன்ற அனைத்திலிருந்தும் அது உங்களைத் தப்புவிக்கும்.

நிறையத் தண்ணீர் குடியுங்கள்.உடலிலுள்ள அசுத்தங்களை வெளியேற்ற அது உதவும்.முக்கியமாக உணவு உண்டபின் குளிர்ந்த நீரைக் குடிக்கவே குடிக்காதீர்கள்.மிதமான சூடுள்ள தண்ணீரையே அருந்துங்கள்.இனிப்புப் பொருட்களை உண்பதை அளவுடன் நிறுத்திக் கொள்ளுங்கள்.உடலின் சீனி அளவு அதிகரிக்கும் போது கொழுப்பு,இன்சுலின்,டிரைகிளைசெரிட்ஸ் போன்றவற்றின் அளவு உடலில் அதிகரித்து உடலின் எதிர்ப்புச் சக்தியை கொஞ்சம் கொஞ்சமாய் வலுவிழக்கச் செய்யும்.நினைவில் கொள்ளுங்கள்.நீங்கள் வாங்கும் பொருளில் குளுகோஸ்,சுக்ரோஸ்,லாக்டோஸ்,கார்ன் சுகர் என எழுதப்பட்டிருப்பவை எல்லாம் இனிப்புப் பொருட்களே.

எலும்புகள் வலிமையாக இருக்க வேண்டியது உடலின் மிக முக்கியமான தேவை.இல்லையேல் ஒஸ்டியோபோரோசிஸ் போன்ற எலும்பு உடைவு நோய் வந்து மிகப் பெரிய சிக்கலை உருவாக்கிவிடும்.எனவே உடலுக்குக் கல்சியம் சத்து அதிகம் கிடைக்கக் கூடிய உணவுகளை தவறாமல் உண்ணுங்கள்.எலும்பின் உறுதியை நீர்த்துப் போகச் செய்யும் குளிர்பானங்களை(கோக்,பெப்ஸி வகையறாக்கள்)முழுமையாய் ஒதுக்குங்கள்.காலை வெயிலிலும் கொஞ்ச நேரம் உலாவுங்கள்.விட்டமின் டி இலவசமாய் கிடைக்கும்.

தேவையான ஓய்வு,தேவையான தூக்கம் மனதை இலகுவாக்குதல் இவையெல்லாம் மிக மிக முக்கியம்.வேலை,வேலை என எந்நேரமும் அலையாமல் உடலுக்கும் மனதுக்கும் மகிழ்ச்சியளிக்கும் செயல்களை தினமும் சற்று நேரம் செய்யுங்கள்.குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் அன்பாகவும் இனிமையாகவும் செலவிடும் நிமிடங்கள் ஆரோக்கிய உடலுக்கு வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160711-1.indd 6

# கொல்லும் பணியில் பெண்கள்

உலகில் போதைப் பொருள் கடத்தலின் தலைநகரம் எதுவெனக் கேட்டால் அந்த நான்கெழுத்துக்கான பதில் மெக்ஸிகோ! போதைப் பொருள் அங்கே ஒரு வளமான வியாபாரம். மில்லியன்களைக் கொட்டித்தரும் வர்த்தகம். அப்படியானால் அரசே அந்த வியாபாரத்தை ஊக்குவிக்கிறதோ என்று நினைத்துவிடக்கூடாது. எல்லா நாடுகளில் இருக்கும் சட்டங்களைப் போலவே அங்கேயும் அது தண்டனைக்குரிய குற்றம்தான். ஆனால், போதைப்பொருள் தாதாக்கள் சட்டத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. பொலிஸின் கண்முன்னே ஜாம்ஜாமென்று போதைப்பொருள் கடத்தல், பொலிஸ் வளைத்துப் பிடிக்கிறது. நீ சுடுகிறாயா...சுடு நானும் சுடுகிறேன். நான் செத்தாலும் சரி... நீ செத்தாலும் சரி... இதுதான் மெக்ஸிக்கோவின் இன்றைய நிலைவரம்.

இதில் வேதனைக்குரிய ஒரே அம்சம் என்னவென்றால் மெக்ஸிகோ போதைப் பொருள் கும்பல்கள் இப்போது இளம் டீன் ஏஜ் பெண்களை வேலைக்குச் சேர்த்து அவர்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி கொடுத்து ஹிட்வுமன் பதவியில் அமர்த்துவதுதான்.

**ஹிட்வுமன் என்றால்?**

போதைப்பொருள் கடத்தல் கும்பலை எதிர்த்து யாரேனும் வம்புக்கு வந்தால் அவர்களைச் சுட்டுக் கொல்லும் பெண். இரண்டு வாரம் வேலை செய்தால் ஆயிரம் டொலர் சம்பளம் தருகிறார்கள். இது நாட்டின் சராசரி சம்பளத்தை விட மூன்று மடங்கு அதிகம்.

இதில் இந்தப் பெண்களுக்கு நிறையப் பணம் கிடைக்கிறது. தவறான வழியில் என்பது ஒன்று. இன்னொரு உண்மை அவர்களின் முதலாளிகள் மிகக் கொடுமையான இயல்பு கொண்டவர்கள் என்பதால் பாலியல் கட்டாயங்களுக்குட்பட்டாக வேண்டிய நிலை. பொதுவாகவே மெக்ஸிகோவை டிரக் ஸிகோ அல்லது செக் ஸிகோ என்பார்கள். இப்போது இன்னும் மோசமாகிக் கொண்டிருக்கிறது.



## சிவப்பு வைன் குடித்தால்...

சிவப்பு வைன் குடிக்கும் பெண்களுக்கு செக்ஸ் ஆசை அதிகரிக்கும் என்று ஆய்வு முடிவில் தெரியவந்துள்ளது.

இத்தாலி நாட்டிலுள்ள ஃப்ளோரன்ஸ் பல்கலைக்லகழக மருத்துவர்கள். பெண்களின் உணர்வுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். இந்தச் சோதனைக்காக 18 வயது முதல் 50 வயதுவரை உடைய 800 பெண்களைத் தேர்வு செய்து மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆய்வு மேற்கொண்டனர்.

முதல் வகைப் பெண்களுக்கு தினமும் இரண்டு டம்ளர் மற்றும் அதற்கு மேல் சிவப்பு வைன் கொடுக்கப்பட்டது. இரண்டாவது வகை பெண்கள் தினமும் ஒரேயொரு டம்ளர் சிவப்பு வைன் குடிக்க அனுமதிக்கப்பட்டனர். மூன்றாவது வகைப் பெண்கள் மது எதுவும் குடிக்காமல் இருந்தனர்.

சமீபத்தில் இந்த 3 வகைப் பெண்களிடம் 19 வகையான கேள்விகள் கேட்கப்பட்டன, இதன் மூலம் தினமும் இரண்டு டம்ளர் சிவப்பு வைன் குடித்த பெண்கள் அதிக செக்ஸ் ஆசை கொண்டவர்களாக மாறியிருப்பது தெரிந்தது.

தினமும் ஒரு டம்ளர் சிவப்பு வைன் குடித்த பெண்கள் செக்ஸ் விடயத்தில் ஓரளவு ஈடுபாட்டுடன் இருந்தனர்.முழுமையான மதுவிலக்குடன் இருந்த பெண்களுக்கு செக்ஸ் ஆசை எழவில்லை என்பது தெரியவந்தது.

சிவப்பு வைன் குடித்தால் பெண்களுக்கு செக்ஸ் ஆசை அதிகரிக்கும் என்று நீண்டநாள் ஆய்வுக்குப் பிறகு முடிவுக்கு வந்துள்ளனர் ஆய்வாளர்கள்.

சிவப்பு வைன்கள் உடம்பில் இரத்த ஓட்டத்தை வழக்கத்தைவிட அதிகரிக்கும் ஆற்றல் கொண்டது. இதுதான் செக்ஸ் ஆசையைத் தூண்டுவதாக அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது வெளிநாட்டில் நடைபெற்ற ஆராய்ச்சிதான். நம் நாட்டுப் பெண்களுக்கு இது எந்தளவுக்கு ஒத்து வரும் என்பது தெரியவில்லை.



## அமெரிக்காவின் பிராயச்சித்தம்

எந்தப் போர் முடிந்தாலும் அதன் மோசமான விளைவுகள் அதிக காலத்திற்கு மக்களைப் பாதித்துக் கொண்டுதானிருக்கும். வியட்நாம் போர் மட்டும் என்ன விதிவிலக்கு என்றாகிவிடுமா? அதன் விளைவுகள் கொஞ்



சம் வேறு மாதிரி?

வியட்நாம் போரின்போது தெற்கு வியட்நாமில் காடுகளில் பதுங்கிக் கொண்டிருந்த கெரில்லாப் போர் வீரர்களை முற்றிலும் அழிப்பதற்கு முதற்படி அவர்களைப் பார்வையிலிருந்து மறைத்துக்கொண்டிருந்த அந்தக் காட்டுப் புதர்களை, செடி,கொடிகளை அழித்துவிட வேண்டுமென்று நினைத்த அமெரிக்கா தன் விமானங்களில் ஏஜெண்ட் ஓரேஞ்ச் என்ற வேதியியல் மருந்தைக் கொண்டு சென்று பரவலாகத் தூவியது. இந்த ஏஜெண்ட் ஓரேஞ்ச் ஒரு விஷத்தன்மையுடன் கூடிய செடி கொல்லி மருந்து எனலாம்.

தூவியாயிற்று மரம்,செடி,கொடிகள் செத்தாயிற்று. போரில் பல்லாயிரம் உயிர்கள் போயாயிற்று. போரும் முடிந்தாயிற்று. முப்பது ஆண்டுகளுக்கு முன்பே போர் முடிந்துவிட்டாலும் அந்த விஷக் களைக் கொல்லி மருந்தின் நச்சுத்தன்மையால் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். பலருக்குப் புற்றுநோய் வந்தது. பிறவி ஊனங்கள் ஏற்பட்டன. இப்போது வியட்நாம் மண்ணில் ஏஜெண்ட் ஓரேஞ்ச் திப்பிகளைச் சுத்தம் செய்வதில் வியட்நாமும் அமெரிக்காவும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. அன்றைய எதிரிகள் இன்றைய நண்பர்கள்.

நண்பர்கள் என்றால் கட்டிப்பிடித்துக் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கிறார்கள் என்றல்ல அர்த்தம். போர் எப்போதோ முடிந்துவிட்டது. நாம் தூவிய இரசாயன மருந்தால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுகிறார்களோ என்று அமெரிக்காவுக்கு மனச்சாட்சி குத்துகிறது. நானும் உன்னோடு சேர்ந்து மண்ணைச் சுத்தம் செய்கிறேன் என்று ஒரு பிராயச் சித்தப் பணியில் தன்னை வியட்நாமில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது அமெரிக்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

## அம்மாவின் ஆசையால் வந்த வினை

பெண்கள் வாழ்வை ஆண்கள் மட்டும்தான் பாழடிக்கிறார்கள் என்று எத்தனையோ விவாதங்கள் நடைபெறுகின்றன.அதற்கு துணைபோவது பெண்களாகவே காணப்படுகிறார்கள்.ஒரே விதமான பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் பிரச்சினையை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆண்,பெண் திருமணம் நடைபெறுவது என்பது இருவரும் சேர்ந்து வாழ்வதற்கு.மனிதனாகப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக படைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தம் வாழ்வில் சில பிரச்சினைகளை எதிர்கொண்டாலும் அது அவர்களை மட்டுமே பாதிக்கிறது.அதனால் வேறு யாரும் பாதிப்புக்குள்ளாகமாட்டார்கள்.ஆனால் சில விடயங்கள் மற்றவர்களை பாதிப்புக்கு உள்ளாக்கக் கூடிய விடயங்கள் அவற்றை பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. இன்னொருவருடைய வாழ்வை வீணடிக்கிற மாதிரியான செயற்பாடுகள் இன்று இங்கே காணப்படுகின்றன.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு பெண்ணுக்கு திருமணப் பேச்சு நடந்தது.பெற்றோர்கள் தம் மகளுக்கு ஏற்றவாறு பல இடங்களில் மணமகன் தேடி ஒருவாறு ஒரு மணமகனை கண்டுபிடித்து திருமணம் செய்து வைத்தனர்.ஆனால் அந்த மணமகனுக்கு திருமணத்தில் விருப்பமில்லை என்பது அவரின் முகத்தில் தெரிந்தது.ஆனால் யாருக்கும் என்ன காரணம் என்று தெரியவில்லை.மணமகளின் பெற்றோரும் தமது மகளிற்கு திருமணம் முடிந்துவிட்டது என்று சந்தோசமாக இருந்தார்கள்.அவர்கள் மணமகன் வீட்டிலேதான் வாழ வேண்டும் என்பது மணமகனின் தாயாரின் கட்டளை.

திருமணம் நடந்து முடிந்து மூன்று மாதங்கள் கடந்து விட்டது.மணமகளின் உறவினர் வீட்டில் ஏதோ விசேட நிகழ்வு என்று இவர்களையும் அழைத்து இருந்தார்கள்.மணமகன் செல்லவில்லை. தன் மனைவியை அனுப்பி வைத்தார்.அவர்கள் எல்லோரும் சென்று நிகழ்வை முடித்து விட்டு வீட்டை வந்து பார்த்தால் மணமகன் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.யாருக்குமே என்ன நடந்தது என்று புரியவில்லை.மணமகளின் பெற்றோர் உன்னுடன் சந்தோசமாக தானே இருந்தார். ஏன் திடீரென இறந்துவிட்டார் என்று கேள்விகள் எழுப்பினர்.அப்போது தான் மணமகன் எழுதிய கடிதம் அவர்கள் கையில் கிடைத்தது.

மணமகளுக்கும் அவளின் பெற்றோருக்குமாக எழுதப்பட்டிருந்த கடிதம் அது.முதலில் நான் எல்லோரிடமும் மன்னிப்பு கோருகின்றேன். என் மரணத்திற்கும் என் மனைவிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.நான் திருமணம் செய்து வாழ்கின்ற தகுதி அற்றவன்.என்னால் அவளுக்கு வாழ்வோ உங்களுக்கு ஒரு பேரக் குழந்தையோ தரும் தகுதியற்ற ஆண் நான்.இந்த விடயம் என் தாயாருக்கு தெரியும்.நான் எவ்வளவு சொல்லியும் பொருளுக்கும் வீட்டிற்கும் ஆசைப்பட்டு என்னை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்தார் .இந்த விடயம் நான் திருமணம் முடிந்து வந்த மறுநிமிடமே என் மனைவிக்கு கூறிவிட்டேன்.ஆனால் அவள் இந்த விடயம் கேள்விப்பட்டால் தன் பெற்றோர் மனமுடைந்து போவார்கள் என்று அதனை வீட்டிலே கூறாது எம் வீட்டிலே தனியாக வாழ்ந்து வந்தாள்.ஆனால் என்னால் என் மீதுள்ள குற்ற உணர்ச்சியில் நான் துவண்டு போய்விட்டேன்.

இந்த விடயம் மற்றவர்களுக்கு தெரிந்தால் நான் அவமானப்பட நேரிடும் என்பதற்காகவும் என் மனைவிக்கு நல்லதோர் வாழ்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் நான் என் உயிரை மாய்த்துக் கொள்கிறேன்.என் தாயாருடைய செயலுக்கு நானும் உடந்தையாக இருந்து ஒரு பெண்ணின் வாழ்வை வீணடித்து விட்டேன் என்று எழுதப்பட்டிருந்தது.

இப்படி பல சம்பவங்களைக் கூற முடியும்.சீதனத்துக்காக ஆசைப்பட்ட தாயினால் மகனின் உயிரும் போச்சு.ஒரு பெண்ணின் வாழ்க்கையும் போச்சு.

நிகழ்யா

## மனைவி ஒரு மந்திரியா...?

திருமணமான பெண்களுக்கு பன்முகத்திறமை உண்டு.சிறந்த இல்லத்தரசியாகவும் கணவருக்கு சிறந்த மனைவியாகவும் குழந்தைகளுக்கு சிறந்த தாயாகவும் கடமையாற்ற வேண்டும்.இதில் சிக்கலான விடயம் கணவரிடம் சிறந்த மனைவி என்று பெயரெடுப்பதுதான்.மனைவி என்பதை அதிகாரம் செய்யும் பதவியாக எடுத்துக் கொண்டு கணவரை அடிமையாக நடத்துபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.மனைவியாக இருப்பதை விட கணவருக்கு நண்பியாக இருப்பதுதான் சிறந்தது என்று உளவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.சிறந்த மனைவியாகவும் ஆலோசகராகவும் திகழ நினைப்பவர்களுக்கு உளவியல் நிபுணர்கள் தெரிவித்த சில யோசனைகள்:

கணவரின் முதல் ஆலோசகரும் விமர்சகரும் மனைவிதான் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுங்கள்.மனைவி ஒரு மந்திரி என்பதை அனைத்து சந்தர்ப்பத்திலும் கணவருக்கு உணர்த்த வேண்டும்.கணவரின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றுவதோடு மட்டும் மனைவியின் கடமை முடிந்துவிடுவதில்லல.தவறுகளை எடுத்துக்கூறி திருத்துவதற்கும் உரிமை உண்டு.

கணவன் மனைவிக்கிடையே ஒரு சில நேரங்களில் கருத்து மோதல்கள் ஏற்படுவது இயல்பு. ஆனால் அவற்றை சாதாரணமாக எடுத்துக் கொண்டு உடனடியாக தீர்ப்பதில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.தேவையற்ற விவாதங்களைத் தவிர்த்தாலே குடும்பத்தில் சிக்கல்கள் ஏற்படாது.

கணவரிடம் பேசும்போது வெளிப்படுத்தும் வார்த்தைகளில் அன்பும் கனிவும் மட்டுமே இருக்க வேண்டும்.அதிகாரமோ ஆணவமோ தேவையில்லை.சிறு வார்த்தை கூட மனதளவில் காயத்தை ஏற்படுத்திவிடும்.நீங்கள் பேசும் வார்த்தைகள் எளிதாக உங்கள் கணவரை சென்றடைந்து அதை செயற்படுத்தும் விதமாக அமைய வேண்டும்.எந்தச் சந்தர்ப்பத்திலும் ஈகோவை எட்டிப் பார்க்க விடாதீர்கள்.



எந்தச் சந்தர்ப்பத்திலும் பிறரின் முன் கணவரை விமர்சிக்க வேண்டாம்.குழந்தைகளின் முன் கூட கணவரை விமர்சிப்பது தவறான முன் உதாரணமாகி விடும்.கணவர் செய்வது தவறாகவே தெரிந்தாலும் தனியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் பேசி அவரது தவறை புரிய வைக்க வேண்டும்.

எல்லா நாட்களிலும் படுக்கையறையில் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.வேலைப்பளு,மன உளைச்சல் உள்ளிட்ட காரணங்களால் சில நாட்களில் செயல்பட முடியாத நிலை ஏற்படலாம். அன்றைய தினத்தில் கணவரை தொந்தரவு செய்வதை விடுத்து அவரை உற்சாகமூட்டும் விளையாட்டுக்களில் ஈடுபடலாம்.அது கணவரின் மன உளைச்சலை போக்கிவிடும்.

கணவர் என்பவர் காலம் முழுவதும் நம்முடன் வரப்போகிறவர் என்ற எண்ணம் மனைவிக்கு இருக்க வேண்டும்.வாழ்வின் சரிபாதி. கணவரின் மதிப்பை உயர்த்துவது மனைவியின் கடமை.அசாதாரண சந்தர்ப்பங்களில் கணவரின் நண்பர்கள் உங்கள் வீட்டிற்கு வர நேர்ந்தால் நீங்கள் நடந்து கொள்ளும் விதம் தான் அவர்களிடம் மதிப்பை உயர்த்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்திணை மஞ்சிகன் சிறுநிகண்டு

ஆர்.பன்னிருகைவடிவேலன்

கி.பி.8 ஆம் நற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பரப்பில் சொற்பொருள் விளக்கும் கருவி நூல்களான நிகண்டுகள் பல தமிழில் தோன்றியுள்ளன. அவற்றுள் ஐந்திணை மஞ்சிகன் சிறுநிகண்டும் ஒன்று.

மஞ்சிகன் என்பவரால் எழுதப்பட்டது இந்நூல். இது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளுக்குரிய தாவரங்களைப் பற்றிக் கூறும் சிறிய நூல். ஆசிரியர், பெயர், ஐந்திணைச் சார்பு, அளவு, சிறுமை ஆகியன பற்றி இந்நூல் 'ஐந்திணை மஞ்சிகன் சிறுநிகண்டு' எனப் பெயர் பெற்றது. இதன் பெயர் சிறுநிகண்டு என்று இருப்பதால், இவ்வாசிரியர் இயற்றிய பெருநிகண்டு ஒன்று இருந்திருக்கக்கூடும் என எண்ணத் தோன்றுகிறது.

நமக்குக் கிடைக்கிற நூல்கள் அனைத்திலும் கடவுள் வாழ்த்து, குரு வாழ்த்து, அவையடக்கம் போன்றவற்றால் ஏதாவது ஒன்று நூலின் தொடக்கத்தில் அமைந்திருக்கும். நிகண்டு நூல்களும் இதைக்காண முடிகிறது. இந்நிகண்டில் இவைகளில் ஒன்றும் காணப்படவில்லை. இதற்குக் காரணம், அவைகிடைக்கப்பெறவில்லையா? மஞ்சிகன் என்பவர் இயற்றிய பெருநிகண்டு என்னும் ஒன்றின் தொடர்ச்சியாக இது அமைந்ததா? என அறிய இயலவில்லை.

இந் நிகண்டு மாகறல் தி.பொன்னுசாமி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளதை இவர் தமது முன்னுரையில், மாகறல் கார்த்திகேய முதலியாரிடமிருந்து இந்நிகண்டு கிடைத்ததாகக் கூறியுள்ளார். மேலும், ''கொல்லிமலை நிகண்டு, விநாயக நிகண்டு ஆகிய நிகண்டுகள் வெளிவராமல் போனதைப்போன்று மஞ்சிகன் ஐந்திணைப் பெருநிகண்டு ஒன்று இருந்து வெளியிடப்பட்டாமல் போயிருக்கும்'' என்று பதிவு செய்துள்ளார். இந்நிகண்டு பதிப்பிக்கப்பட்ட காலம் பற்றிய தெளிவான செய்திகள் கிடைக்கவில்லை.

இந்நூல், எளிதில் மனனம் செய்வதற்கு ஏற்றவாறு 122 ஓரடி நூற்பாக்களைக் கொண்டுள்ளது. மரங்களின் பெயர்களையும் பிற தாவரங்களின் பெயர்களையும் கூறுகிறது. இந்நூலில் 122 மரங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு மரத்துக்கும் பெரும்பான்மை 2 பெயர்களும் (தடவம், தணக்கு-56) சிறுபான்மை பெயர்கள் (பிசிதம், மந்தம், வெள்ளறுகு-68) என மூன்று பெயர்கள் வரை சுட்டியுள்ளதைக் காணமுடிகிறது. மேலும், மருத்துவ குணமிக்க மரங்களையும் வாசனைப் பொருள் மிகுந்த மரங்களையும் குறிப்பிடுகின்றதேயன்றி, அவற்றின் பயன்பாடு பற்றிக் கூறப்படவில்லை.

பிரம்பு, சிறுமுன்னை,பெருமுன்னை, தென்னை, பனை, வெண்முருங்கை, மூங்கில், தகரை, ஈஞ்சு, நிலவேம்பு, ஆலம், மகிழ், கொன்றை, குரா, செருந்தி, சந்தனம், அரசு, கோங்கம், ஓதியம், புளி, குங்குமம், அனிச்சம், கொய்யா, ஆத்தி, தேறு, இரும்பிலி, தும்பிலி, கடம்பு, பிடா, ஊசிப்பாலை, பெருமரம், கருங்குன்றி ஆகிய மரங்களின் பெயர்களை இந்நூல் பட்டியலிட்டுள்ளது.

செடிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் கீரைவகைகள், கொடிவகைகள், மூலிகைகள் அடங்குகின்றன.

மூலிகை (ஓடதி,ஔடதம்), கருநாகதாளி, அறுகு, சித்திரமூலம், நஞ்சுமுறிச்சான், முடக்கற்றான், பச்சிலை, ஆவிரை, தான்றி, பல்லி, பொருதலை, குதம்பை, தணக்கு, செம்பு, பிரமி, ஈயுணி, வெள்ளறுகு, காக்கணம், கஞ்சாங்கோரை, கொறுக்கை, நன்னாரி, நெடுங்கோரை, கரும் பிரண்டை, திரிதளமூலி, பாற்சொற்றி, சிறுநெல்லி, செந்தூதளை, வெண்தூதளை, கரிசலாங்கண்ணி, நெருஞ்சில், துளசி ஆகிய மூலிகைச் செடிகளின் பெயர்களையும், சிறுகீரை, தெர்ய்யா, கானாங்கீரை, பொன்னாங்கண்ணி ஆகிய கீரை வகைகளும் கூறப்பட்டுள்ளன.

நறுவிலி, கோவை, ஆமணக்கு, பூனைக்காஞ்சொறி, பூனைக்காலி, தகரை, பீநாறி, நீர்மேல்நெருப்பு, பனிதாங்கி, மஞ்சாடி, மாதளை, கூவிளம், விண்டுகாந்தி, சூரியகாந்தி, எலுமிச்சை, வேளை, சின்னி, வேடு, எருக்கம், குதிரைக்குளம்பு, உடுப்பை, குருவி, படலைக்கள்ளி, கஞ்சா, கத்தரி, தும்பை, பசலை, புல்லுருவி, சிறுபுள்ளடை, அச்சங்கரணை, சவண்டல், நாயிறுதிரும்பி, நமை, பீர்க்கு, அவுரி, நொச்சி, மயிர்மாணிக்கம், அவரை, மயிர்ச்சிகை, நாரத்தை, வாகை, மஞ்சல்புல், குறிஞ்சி, தாழை ஆகியனவும் உம்பிலம், கோற்கொடி, வள்ளை, பூசணி ஆகிய கொடிவகைகளின் பெயர்களும் காணப்படுகின்றன.

திவாகரம், பிங்கலம் ஆகிய இரண்டு நிகண்டுகள், மரப்பெயர்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றன. ஆனால், இந்நிகண்டு கூறியுள்ள அனைத்தும் அவற்றில் இல்லை. சான்றாக இந்நிகண்டு தென்னையின் பெயரைக் குறிப்பிடும்போது, நாலிநாரி, தெங்கு தென்னை (7) என்கிறது. ஆனால் திவாகரம், நாளிகேரம், தெங்கு தழை என நவில்வர் (திவா.702) என்று குறிப்பிட்டுள்ளது.

இந்நிகண்டினை வேறு நிகண்டுகளின் மரப்பெயர்த் தொகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் புதிய செய்திகள் பல புலப்படும். திவாகரம், பிங்கலம் ஆகியவற்றோடு பொருத்திப் பார்த்ததில் மாறுபட்டும், வேறுபட்டும், புதியதாகவும் இந்நூலின் கருத்துகள் தோன்றியுள்ளதைக் காணமுடிகிறது.




ஒவ்வொரு நூற்பாவும் ஆகும் எனப்படும், எனப்படுமே என்று முடிவதாக அமைந்துள்ளது. இந்நூலில் மரத்தின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளனவேயன்றி, பொருள் புரிந்து விளங்கிக்கொள்ளும் அளவிற்குரியதான பதிப்புகள் வரவில்லை.

இந்நிகண்டில் கூறியுள்ள பெயர்களைக் கொண்டு இன்று, இப்பெயர்கள் வழக்கில் இல்லை என்பதை அறிய முடிகிறது. உச்சரிப்பு ஒலியனின் வேறுபாட்டால் புதுப்பெயர்கள் அறிமுகமாகின்றன. நிக்ண்டு வளர்ச்சி வரலாற்றில மரப்பெயர்களுக்குரிய தொகுதியாக விளங்குவதால் இந்நிகண்டும், நிகண்டு வளர்ச்சி வரலாற்றில் ஒரு பங்கு வகிக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி ஆண்டு

ஒரு பொருள் நம் கண்களுக்குத் தெரியவேண்டுமானால் கண்ணைத் திறந்து பார்த்தால் மட்டும் போதாது.அதற்கு வெளிச்சமும் தேவை.அப்போதுதான் பார்க்கும் பொருள் நம் கண்களுக்குத் தெரியும்.

ஒளியை மையமாக வைத்துத்தான் நட்சத்திரங்களுக்கு இடையே உள்ள தூரத்தைக் கணக்கிடுகின்றனர்.அதற்கான அலகுகளைத்தான் ஒளி நிமிடம் ஒளி ஆண்டு என்று அழைக்கிறோம்.

சூரியன் நெருப்பு கோளமாக இருப்பதால் அதில் இருந்து வெளிப்படும் ஒளி கோடிக்கணக்கான கிலோமீற்றர் தொலைவிற்குப் பரவுகிறது.சூரிய கதிர்கள் பூமிக்கு வரும்போது நமக்கு வெளிச்சம் கிடைக்கிறது.



ஒளி ஒரு விநாடியில் 3 இலட்சம் கிலோமீற்றர் தூரத்தைக் கடக்கிறது.இந்த தூரத்திற்கு ஒளி விநாடி என்று பெயர்.ஒரு நிமிடத்தில் ஒளி பாயும் தூரம் ஒளி நிமிடம் எனப்படும்.அதன்படி ஒளி நிமிடத்தின் தூரம் 3,00,000x60-1,80,00,000 கிலோமீற்றர்.இப்படி கணக்கிடும்போது ஒரு ஆண்டில் ஒளி பாயும் தூரம் அதாவது ஒரு ஒளி ஆண்டு என்பது 9,460,800,000,000 கிலோமீற்றர் அல்லது *9.4605284 x 1015* மீற்றர் என்ற அளவைக் குறிக்கிறது.




## தெரிந்துகொள்ளுங்கள்

* முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இயற்கை 'ஆன்ட்டி பயாடிக்' மருந்து 'பென்சிலின்'.

* நெருப்புக்கோழியின் முட்டையை வேகவைக்க 60 முதல் 90 நிமிடங்கள் வரை ஆகும்.

* ராணி கரையான்,ஒரேநாளில் சுமார் 3 ஆயிரம் முட்டைகள் வரை இடும்.

* 1931 ஆம் ஆண்டு முதல் புதுடில்லி என்ற பெயர் வழங்கப்படுகிறது.

* உலகின் முதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி 1928 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி ஒளிபரப்பப்பட்டது.

## குறுக்கெழுத்துப்போட்டி - 92

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 𝄞 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 𝄞 | 16 |
| 17 | 𝄞 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 𝄞 | 𝄞 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**இடமிருந்து வலம்**

1. இறந்தவருக்கு இறுதியாகச் செய்யப்படும் கிரியை
7. தேர், சக்கரம்
12. விளக்குத் தண்டு, குதிரைச் சம்மட்டியை இப்படிச் சொல்வர் (குழம்பியுள்ளது)
18. வலிமை, செருக்கு (குழம்பியுள்ளது)
22. 60 தமிழ் வருடங்களில் ஒன்று (திரும்பியுள்ளது)
24. ஒரேயளவான என்று பொருள்படும். முக்கியமான கணிதக் குறியீடு
26. முக்காலங்களில் இறுதியானது (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. இந்து மதத்தின் எண்வகைத் தத்துவங்களில் ஒன்று
2. நாரதரின் வீணையை இப்படிச் சொல்வர். பிரபல தொலைக் காட்சிப் பெண் அறிவிப்பாளர், பாடகி.
3. வளைவு, ஒரு தடவையில் அருந்தும் நீரின் அளவை இப்படிச் சொல்வர் (குழம்பியுள்ளது)
4. தாழம்பூவின் மறுபெயர். (குழம்பியுள்ளது)
6. உயிர்களைக் கவர்பவன். (குழம்பியுள்ளது)
20. வல்லமை, பெண் தெய்வம் (குழம்பியுள்ளது)
23. ஒன்றிற்கும் மேற்பட்டவை.

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 90 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. பாசிப்பயறு | 1. பாவைக்கூத்து |
| 7. வைக்கோல் | 2. சிக்கர் |
| 12. புத்தகம் | 3. கோப்பு |
| 17. கூர் | 4. ஆம்பல் |
| 19. ஆசாரி | 6. மறு |
| 24. தடை | 16. சாக்கடை |
| 26. துக்கராகம் | 21. ரிதம் |
| | 23. ராசி |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**ஜே.மார்சல் ஆக்ஷன் சொய்சா,**
**5 ஆம் வட்டாரம்,**
**வங்காலை, மன்னார்.**

### பாராட்டுப் பெறுவோர்

01. எஸ்.கிர்சோத்
சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்,
பதுளை.
02. எஸ்.எப்.நஷீஹா,
இல. 115 அண்ணல் வீதி,
மாஞ்சோலைச்சேனை, கிண்ணியா.
03. ஜே.எச்.ஹயாமா
மீரானியா வீதி, கொழும்பு-12.
04. இ.சைபாஷ்
இல, 5 பிள்ளையார் கோயில் வீதி,
கல்லடி, உப்போடை,
மட்டக்களப்பு.
05. என்.அபர்ணா
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

## விநோதமான பிரபலங்கள்



★ புகழ்பெற்ற எழுத்தாளரான சார்ல்ஸ் டிக்கன்ஸ் வடக்கு நோக்கிப் படுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.அது தனது எழுத்துத் திறமையை அதிகரிக்கும் என்று அவர் நம்பினார்.

★ சீனாவில் பிரசித்தமாக விளங்கும் மூன்று மேற்கத்திய பெயர்கள்,ஜீசஸ் கிரைஸ்ட் (இயேசு கிறிஸ்து), ரிச்சர்ட் நிக்சன் (அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி), எல்விஸ் பிரெஸ்லி (பொப் பாடகர்)

★ஜூலியஸ் சீசர் தனது தலையின் வழுக்கையை மறைக்க ஒரு மலர்க்கிரீடத்தைத் தலையில் சூடிவந்தார்.

★ சீனப் புரட்சியாளர் மாவோ சேதுங், ஆரம்ப காலத்தில் பீஜிங்கில் உள்ள ஒரு நூலகத்தில் சாதாரண உதவி நூலகராக பணியாற்றி வந்தார்.



★ பாப்பாண்டவர் ஜான் இரண்டாம் உலகப் போரின் போது இத்தாலிய இராணுவத்தில் சார்ஜன்டாக பணிபுரிந்தார்.

★ இஸ்ரேல் நாட்டின் ஜனாதிபதி பதவியை அல்பர்ட் ஐன்ஸ்டீனுக்கு வழங்க முன்வந்தார்கள்.தன்னால் பிரச்சினைகளால் மண்டையை உடைத்துக் கொள்ள முடியாது என்று கூறி அதை மறுத்துவிட்டார் ஐன்ஸ்டீன்.



★ முதலாம் எலிசபெத் அரசியின் ஆட்சியின்போது தாடி வைத்த ஆண்களுக்கு வரி விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சில பழுத்ததுகள்

டாக்டர்! நாங்க நாலு பேரும், கொஞ்ச நாளைக்கு முன்னால் சுற்றுலாவொன்று போய் ஜாலியா இருந்துட்டு வந்தோம். இப்போ, எங்களுக்குப் பயமா இருக்கு எங்களுக்கு எச்.ஐ.வி.டெஸ்ட் பண்ணணும்...' வார்த்தையை முடிப்பதற்குள் சொன்னவனை ஓங்கி அறைந்தார் அந்த டாக்டர். மற்ற மூன்று பேரும் ஓரடி பின் வாங்கினர். காரணம், அவர்கள் நால்வரும் ஒரு தனியார் பாடசாலையில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் நகரின் முக்கிய மருத்துவமனையில் பணியாற்றும் பாலியல் மருத்துவரின் அறையில் நடந்தது இந்த நிகழ்வு. இதற்கு மேல்தான் காத்திருக்கிறது அதிர்ச்சி.

மாணவர்கள் ஏதோ பயத்தில் வந்திருக்கின்றனர் என்று நினைத்து, அவர்களை பரிசோதித்துப் பார்த்த போது, அவர்களில் ஒரு மாணவனுக்கு எச்.ஐ.வி.பொசிட்டிவ் என்று தெரியவந்தது. ''எத்தனையோ எச்.ஐ.வி. நோயாளிகளுக்கு நான் சிகிச்சை கொடுத்திருக்கேன் இந்த வயசுல, இப்படி வந்து நின்ன பசங்க இவங்க மட்டும்தான் நம்ம கலாசாரமும், வாழ்க்கை முறையும் எங்கே போகுதுன்னு நினைச்சப்ப, எனக்கு நாலு நாளா தூக்கமே வரலை'' என்று முடித்தார் அந்த டாக்டர்.

நகரிலுள்ள தனியார் பாடசாலைகளில் படிக்கும் மேல் தட்டு மாணவர்கள் பலரிடம் அதி நவீன மொபைல் போன்கள் சர்வ சாதாரணமாகப் புழங்குகின்றன. அவற்றின், அதிவேக இன்டர்நெட் இணைப்பும் கிடைக்கிறது. இல்லாவிட்டால், இன்டர்நெட்டில் இருந்து அவர்களே, இறக்கி வைத்துக்கொள்கின்றனர். காசைக் கொட்டுவதற்கு, இவர்களின் பெற்றோர் தயங்குவதே இல்லை. இந்த வாழ்க்கை முறைதான், இந்த மாணவர்களை மரணத்தின் விளிம்பு வரைக்கும் கொண்டு சென்றிருக்கிறது.

கலாசாரத்தின் ஆணிவேர்களில் அமிலத்தை ஊற்றும் இந்த தகவல் தொடர்பு சாதனங்கள், தேசத்தின் வளர்ச்சிக்கு உதவுவதற்குப் பதிலாக, இந்த தேசத்தின் நாளைய மன்னர்களுக்கு சவக்குழிகளை வெட்டிக் கொண்டிருக்கின்றன. பல மாதங்களாக ஆபாச படங்களை காட்சிகளாகப் பார்த்துப் பழகி, அதற்கு அடிமையாகி விட்ட நிலையில்தான், இந்த மாணவர்கள் அடுத்த கட்ட முயற்சிக்குப் போயிருக்கின்றனர். இவர்களைப் போலவே, இன்றைக்கு ஏராளமான் மாணவர்கள் பிரவுசிங் சென்டர்களுக்குள் புகுந்து, வாழ்வுக்கான அழிவைத் தேடிக் கொள்கின்றனர்.

விளையாட்டாக 'வீடியோ கேம்ஸ்' களை மட்டுமே ரசித்த பாடசாலை மாணவர்கள், ஆபாச வலைத்தளங்களையும் அடிக்கடி நலம் விசாரிக்கின்றனர். இளைய சமுதாயம் இப்படி ஆபாசங்களில் அழிந்து போவது வேதனைக்குரிய விஷயம். பெரு நகரங்களில் உள்ள மாணவர்களுடன், கல்வி, விளையாட்டு, பொது அறிவு போன்ற விஷயங்களில் போட்டி போட வேண்டிய மாணவ் சமுதாயம், இத்தகைய விஷயங்களில் பெருநகரத்து மாணவர்களுக்குப் போட்டியாக வளர்வதற்கு முழு முதற்காரணம், பெற்றோர்கள் அடுத்ததாக, பாடசாலை வளாகம், இறுதியாக வெளிச்சூழல். பெற்றோர் தரும் அதீத சுதந்திரம், பாடசாலை நிர்வாகங்களின் பண வேட்டை, 'டிவி' போன்ற ஊடகங்களின் தாக்கம் ஆகியவற்றுடன், சமுதாய ரீதியான கட்டுப்பாடுகளும் தளர்ந்து போயிருப்பதும் ஒரு காரணம்.




குறிப்பாக, பிரவுசிங் சென்டர்களுக்கு எந்தவித கண்காணிப்பும் இல்லை. விபசாரத்தில் பாடசாலை மாணவர்கள் கூட பாதிக்கப்படும் நிலையில், அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை இல்லை.

ஆபாசமான வலைதளங்களுக்குள் ஒரு சிறுவன், சிறுமி கூட உள்ளே புகுந்து விட முடியும் என்பது சர்வதேசத்துக்குமான சவால் என்றாலும், நம்முடைய கலாசாரத்துக்கு எதிராக நடத்தப்படும் மாபெரும் யுத்தம் என்பதை மறுக்கவே முடியாது. ஆபாச படங்களை அடிக்கடி பார்க்கும்போது. அதற்கு அடிமையாவதுடன் ஆண்,பெண் நட்புக்கு இடையே எல்லை மீறவும் தூண்டுதலாக இருக்கும்.

எனவே, மாணவர்கள் தேவையில்லாத வலைத்தளங்களுக்குள் நுழையும்போது, இணைப்பு கிடைக்காதவாறு செய்ய வேண்டும். மெமரி கார்டு, பென்டிரைவ் கூடாது. வளர் இளம் பருவத்திலுள்ள குழந்தைகள் லேப்-டாப், மொபைல் போனுடன் அதிக நேரம் செலவிடுகிறார்களா என கண்காணித்து மாற்றம் கொண்டு வர பெற்றோர் முயற்சிக்க வேண்டும். ஆபாச படங்களை மெமரி கார்டுகளில் டவுன்லோடு செய்து தர தடை விதிக்க வேண்டும். அத்துமீறுபவர்கள் மீது கடும் நடவ்டிக்கை வேண்டும். குறிப்பிட்ட வலைத்தளங்களையும் கண்காணித்து தடை விதிக்க வேண்டும் என்பது உளவியல் நிபுணர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது.

பெயர் வெளியிடவிரும்பாத பால்வினை நோய் சிகிச்சை நிபுணர் ஒருவர் கூறுகையில், 'தற்போது 12 வயது நிரம்பாத மாணவர்கள் கூட, ஆப்ாச படங்களை பார்ப்பது மட்டுமன்றி செயல் ரீதியாகவும் முயற்சிக்கும் அவலம் உள்ளது. பலரும் ஆபாசப்படங்களுக்கு அடிமையாகிவிட்டு தவறு செய்வது அதிகரித்து வருகிறது. பயம் மற்றும் சந்தேகம் காரணமாக எச்.ஐ.வி.,பாதிப்பு உள்ளதா என பரிசோதிக்க வருகின்றனர். மாதந்தோறும் 30 வயதுக்குள் உள்ள இளைஞர்கள் குறைந்தபட்சமாக 15 பேராவது என்னிடம் பரிசோதனைக்கு வ்ருகின்றனர். இதேநிலை நீடித்தால் ஆரோக்கியமான இளைஞர்களை பார்க்கவே முடியாது' என்றார்.

மனநல டாக்டர் ஒருவர் கூறுகையில், 'முன்பு குறிப்பிட்ட காட்சிகள் எழுத்து; போட்டோ வடிவில் மட்டுமே பார்க்க முடிந்தது. தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக நேரிடையாக பார்க்கும் நிலை தற்போதுள்ளது. ஊடகங்களால் ஆபாச காட்சிகள் சாதாரணமாகி விட்டன. இது தவறானது, கூடாது என்ற மனநிலை மாறிவிட்டது. படிக்கும் வயதிலேயே ஆண் - பெண் உறவு எல்லை தாண்டி, காலாசார சீர்கேடு தலைதூக்குகிறது. கிரைம் சம்பவங்களுக்கும் வழிவகுக்கிறது. தொழில்நுட்பம் என்பது கத்தி போன்றது. சத்திரசிகிச்சைக்கு உதவும் உயிரை கொல்லவும் உதவும் ஆபாச படங்களுக்கு அடிமையான பலரும், பிரச்சினை நம்மை கை மீறி போய்விட்டது. ஆபத்தான நிலையில் உள்ளோம் என்பதை புரிந்து கொள்வதில்லை. ஒரு சிலர் மட்டுமே பிரச்சினையை கூறி தீர்வுகாண முன்வருகின்றனர்' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் அழகானது



இலங்கைத் தமிழ் மிகவும் அழகான தமிழ் என்று கூறியுள்ளார் நடிகர் விஜய். இவர் தென்னிந்திய தமிழ் தொலைக்காட்சி அலைவரிசையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அண்மையில் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் இலங்கைத் தமிழர்கள் நான்கு பேரும் பங்கேற்று இருந்தனர். இலங்கைத் தமிழர்கள் விஜயிடம் கேள்விகள் கேட்டனர். பதில் கூறிக்கொண்டு சென்றபோது இலங்கைத் தமிழர்கள் கதைப்பதைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். இலங்கைத் தமிழ் மிகவும் அழகானது. இத்தமிழை என் மனைவி மூலம் ஒவ்வொரு நாளும் கேட்டு இரசிக்கின்றேன் என்று விஜய் கூறினார்.

## காஜலை மறுத்த அபிஷேக்

என் படத்தில் காஜல் அகர்வால் வேண்டாம் வேறு யாராவது புது முகத்தை போடலாமே என்று கூறியுள்ளார் அபிஷேக் பச்சன். தெலுங்கு இயக்குநர் பூரி ஜெகன்னாத் தெலுங்கு மற்றும் இந்தியில் எடுக்கும் படம் தி பிசினஸ் மேன், தெலுங்கில் மகேஷ் பாபு கதாநாயகனாக நடிக்கிறார். அவருடன் ஜோடி சேர்கிறார் காஜல் அகர்வால். இந்தியில் அபிஷேக் பச்சன் தான் கதாநாயகன் தெலுங்கில் நாயகியாக நடிக்கும் காஜ அகர்வாலையே இதற்கும் நாயகியாக்கிடலாம் என்று இயக்குநர் கூறியிருக்கிறார். அதற்கு அபிஷேக் பச்சன் காஜல் வேண்டாம், யாராவது புது முகத்தை போட்டால் நன்றாக இருக்கும் என்று கூறியிருக்கிறார். காஜல் அகர்வால் ஏற்கனவே சிங்கம் படம் மூலம் பொலிவுட்டில் அறிமுகமாகவுள்ளதால் தான் அபிஷேக் வேண்டாம் என்றிருக்கிறார்.

## நயனை சீண்டும் சிம்பு




நயன்தாராவுக்காக மனைவியை முறைப்படி விவாகரத்துச் செய்தார் பிரபுதேவா. இருவரும் விரைவில் திருமணம் செய்கிறார்கள். பிரபுதேவாவின் வேண்டுகோளின் படி புதிய படம் எதிலும் நயன்தாரா ஒப்பந்தமாகவில்லை. ஸ்ரீராம ராஜ்ஜியமே எனது கடைசிப் படம் என கண்ணீர்மல்க விடைபெற்றிருக்கிறார் நயன். கடை கோடி ரசிகனுக்கும் இது தெரியும். சிம்புவுக்கு தெரியாமலிருக்குமா? நயன்தாராவின் முன்னாள் காதலரான இவர் அனைத்தையும் மறந்திட்டேன் என்று பெரிய மனுஷனாக பேட்டி கொடுத்தார். சரி விடலைப் பேச்சு போயிடுச்சி இனி விவரமாக இருப்பார் என தமிழகம் நம்பியது. ஆனால், அப்படியில்லை ஒஸ்தி படத்தில் ஒரேயொரு பாடலுக்கு ஆட முடியுமா என்று நயன்தாராவிடம் கேட்டிருக்கிறார் சிம்பு. விடலைத்தனம் முற்றாகப் போகவில்லை என்பதற்கு இதைவிட என்ன சான்று வேண்டும். நயன்தாரா மிடுக்காக நோ சொல்லியிருக்கிறார் என்றாலும் சிம்புவின் தொல்லை தொடர்பாகக் கூறுகிறார்கள்.

## Saturday சினிமா




# குத்துப்பாட்டுக்கு மறுக்கும் பிரியங்கா

பொலிவூட்டில் குத்துப்பாட்டுக்கு நான் நீ என போட்டி போட்டு ஆடிக்கொண்டிருக்கையில் குத்துப் பாட்டுக்கு ஆட மாட்டேன் என்கிறார் நடிகை பிரியங்கா சோப்ரா. பொலிவூட்டில் முன்னணி கவர்ச்சி நாயகி பிரியங்கா சோப்ரா (28 வயது) பொலிவூட்டில் தற்போது குத்துப் பாட்டில்லாத படமே இல்லை எனலாம். இந்த குத்துப் பாட்டிற்கு குத்தாட்டம் போட முன்னணி நாயகிகள் எல்லாம் போட்டி போடுகின்றனர். அங்கு குத்துப் பாட்டு அவ்வளவு பிரபலம். இந்நிலையில் குத்துப் பாட்டே வேண்டாம் என்கிறார் பிரியங்கா சோப்ரா. தற்போதும் சரி எதிர்காலத்திலும் சரி குத்துப் பாட்டுக்கு ஆடும் எண்ணமே இல்லை என்கிறார் அவர். இதற்கிடையே அனில் கபூர், அஜய் தேவகன் மற்றும் கங்கனா ரனௌத் நடிக்கும் இயக்குநர் பிரியதர்ஷனின் தேஸ் படத்தில் பிரியங்கா ஒரு பாட்டிற்கு மட்டும் வந்து குத்தாட்டம் போடுவார் என்று பேசப்படுகிறது. ஆனால் இதை திட்டவட்டமாக மறுத்துள்ளார் பிரியங்காவின் செய்தித் தொடர்பாளர். எனினும் தீபாவளிக்கு வெளியாகும் ஷாருக் கானின்ரோ ஒன் படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்க சம்மதித்துள்ளார் பிரியங்கா.


விக்ரம், அனுஷ்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காஞ்சனா – லோரன்ஸ்

# தெலுங்கை கலக்கும் டாப்ஸி



தமிழில் பெரிய வாய்ப்புகள் இல்லாமல் போனாலும் டாப்ஸியின் கால்ஷீட் புத்தகம் நிரம்பி வழிகிறதாம். எல்லாம் தெலுங்கில் வந்து குவியும் படங்களால்தான். டெல்லிக்காரப் பொண்ணான டாப்ஸி, தமிழ், தெலுங்கு, மலையாளம் என கலந்து கட்டி கலக்கி வருகிறார். தமிழில் அவர் நடித்த முதல் படமான ஆடுகளம், அவருக்கு நல்ல அறிமுகத்தைக் கொடுத்தாலும் படம் பிரமாண்ட வெற்றியைப் பெறத் தவறியதால், ராசியில்லாத நாயகியாக அறியப்பட்டு விட்டார். இதனால் தமிழில் டாப்ஸிக்கு பெரிய அளவில் வாய்ப்புகள் வரவில்லை என்று கூறப்படுகிறது. இருப்பினும் தற்போது டாப்ஸி, தெலுங்கில் படு சுறுசுறுப்பாக நடித்துக்கொண்டிருக்கிறார். மலையாளத்திலும் அவருக்கு வாய்ப்புகள் வருகிறதாம். தெலுங்கில் சத்தம் போடாமல் நான்கு படங்களை முடித்து விட்ட டாப்ஸிக்கு இப்போது மேலும் 2 புதிய படங்கள் வந்துள்ளன. ஒரு படத்தில் கோபிசந்த்துடன் இணைந்து நடிக்கிறார். இன்னொரு படத்தில் சுனிலுடன் இணைகிறார். இதில் சுனிலுடன் இணையும் படம். இந்தியில் வெற்றிகரமாக ஓடிய மாதவன், கங்கணா ரணவத் நடித்த தனு வெட்ஸ் மனு படத்தின் ரீமேக்காம் இது போக இந்தியிலும் அவருக்கு பட வாய்ப்பு வந்துள்ளதாம். டேவிட் தவன் இயக்கும் புதிய படத்தில் நடிக்கப் போகிறாராம். டாப்ஸி. இப்படத்தில் தெலுங்கு சூப்பர் நாயகர்களில் ஒருவரான சித்தார்த், 2 நாயகர்களில் ஒருவராக நடிக்கிறாராம். அப்புறம் என்ன கொஞ்ச நாளைக்கு தமிழுக்கு டாப்ஸி டாட்டா காட்டுவார் என்பதில் சந்தேகமில்லை.

டாப்ஸி

## தள்ளிப்போன காஞ்சனா

லோரன்ஸ் இயக்கத்தில் உருவாகியுள்ள காஞ்சனா படத்தின் [illegible]ளியீடு மீண்டும் தள்ளிப் போடப்பட்டது. 2007 ஆம் ஆண்டு ராஜ்கிரண் நடிப்பில் 'முனி' என்ற படத்தை இயக்கி வெளியிட்டார் ராகவா லோரன்ஸ். இந்தப் படத்தின் இரண்டாவது பாகமாக முனி-2 எடுத்துள்ளார். லோரன்ஸ் இதற்கு காஞ்சனா என்றும் பெயரிட்டுள்ளார். லோரன்ஸே நாயகனாகவும் நடித்துள்ளார். லட்சுமிராய், சரத் குமார், ஸ்ரீமன் என முன்னணி நடிகர்கள் நடித்துள்ளனர். தமன் இசையமைத்துள்ளார். திகில் படமான இது தமிழ்-தெலுங்கு என இருமொழிகளில் தயாராகியுள்ளது. இந்த மாத ஆரம்பத்தில் வெளியாகும் என்று கூறப்பட்ட படம் ஜுலை 15 ஆம் திகதிக்கு தள்ளிப் போடப்பட்டது. ஆனால், அன்று தெய்வத் திருமகள், ஹரிபொட்டர் என முக்கிய படங்கள் வருவதால் ஜுலை 22 ஆம் திகதிக்கு தள்ளிப் போடப்பட்டுள்ளது. தெலுங்கில் பிரபல தயாரிப்பாளர் பெல்லம் கொண்டா சுரேஷ் இதனை பெரும் விலைக்கு வாங்கி வெளியிடுகிறா[illegible]

## இந்தியில் தமன்னா

தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் முன்னணியில் இருக்கும் தமன்னா விரைவில் இந்திப் படத்தில் நடிக்கிறார். கேடி படம் மூலம் தமிழில் அறிமுகமான தமன்னாவின் முதல் திரையுலகப் பிரவேசம் நடந்தது இந்தியில். முதல் படம் தோல்வி இதனால் தென்னிந்தியா பக்கம் கவனத்தைத் திருப்பினார். இப்போது வெற்றிகர நடிகையாக மீண்டும் இந்திக்கு செல்கிறார். அஜய்தேவ்கானின் சமீபத்திய படங்களில் சிங்கம் படமே அதிக தொகைக்கு விற்பனையாகியுள்ளது. ஏறக்குறைய 80 கோடி கள். சிங்கம் தமிழில் வெளியான சிங்கத்தின் இந்தி ரீமேக். அடுத்து தெலுங்குப் படமொன்றின் இந்தி ரீமேக்கில் நடிக்கிறார். இந்தப் படத்திற்காக அவர் தமன்னாவை சிபாரிசு செய்துள்ளார். தமன்னாவுக்கு தற்போது தமிழில் படங்களே இல்லை என்பது முக்கியமானது.

நாட்டை கலக்கிக் கொண்டிருக்கிறது 2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரம். இதே பெயரில் படத்துக்கு பூஜையே போட்டுவிட்டார்கள் கோடம்பாக்கத்தில். 2ஜி முறைகேடுகளை வைத்து ஜான் மனோகர் இயக்கும் இந்தப் படத்தில் அதில் சம்பந்தப்பட்ட தி.மு.க புள்ளிகளை விளாசவிருக்கிறார்கள் கனிமொழியாக லட்சுமி ராமகிருஷ்ணன். ஆ.ராசாவாக ரியாஸ்கான், அழகிரியாக சிங்கமுத்து நடிக்கிறார்களாம். நீரா ராடியா வேடத்தில் லட்சுமிராய் நடிப்பார் என்றார்கள் இப்போது நாடோடிகள் சாந்தினி பெயர் அடிபடுகிறது. தேர்தல் ஆணையராக சத்யராஜ் நடிக்கலாம் என்கிறார்கள். பாதுகாப்புக் கருதி படத்தின் போஸ்டர்களில் அம்மாவை ஒரு தூக்கு தூக்கியிருக்கிறார்கள். 2ஜி விவகாரம் நீதிமன்றில் இருக்கும் போது அதை வைத்து படமெடுக்கலாமா என்று சட்டத்தரணியிடம் ஆலோசனை கேட்டார்களா என்பது தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் சூட்டைக் கிளப்பும் நித்தியானந்தா – ரஞ்சிதா

சாமியார் நித்தியானந்தாவும் நடிகை ரஞ்சிதாவும் ஒரே அறையில் நெருக்கமாக இருந்த சீ.டிக்கள் வெளியாகி பரபரப்பு ஏற்பட்ட பின்னர் ஒன்றரை ஆண்டுகளாக சென்னைக்கு வராமல் இருந்த ரஞ்சிதா, கடந்த புதன் கிழமை திடீரென்று சென்னை வந்தார். பொலிஸ் ஆணையரை சந்தித்தார். இரவில் திநகர் நட்சத்திர ஹோட்டலில் பேட்டியளித்தார்.

ரஞ்சிதா வந்து அமர்ந்தவுடன் எழுந்து நின்று போஸ் கொடுக்கும்படி புகைப்படப் பிடிப்பாளர்கள் கேட்டனர். இப்படிச் சொல்லிச் சொல்லியே என்னைத் தெருவுக்கு கொண்டு வந்திட்டீங்க என்றார் ரஞ்சிதா. பின்னர் அவர் கூறியதாவது;

கடந்த ஆண்டு மார்ச் 2 ஆம் திகதி என்னைப் பற்றி வீடியோ காட்சிகள் ஒளி பரப்பப்பட்டன. அதனால் எனது சுதந்திரம் பறிபோய் விட்டது. அந்தக் காட்சிகளை வெளியிட்ட ரீ.வி., பத்திரிகைகள் மீது நடவடிக்கையெடுக்க பொலிஸ் ஆணையரிடம் மனுக் கொடுத்துள்ளேன். நான் ஒரு சாதாரண குடும்பப் பெண். நடிப்பது என் தொழில். இவ்வாறு ரஞ்சிதா கூறினார். பின்னர் நிருபர்கள் கேள்விக்குப் பதிலளித்த அவர் கூறியதாவது;

ஒன்றரை ஆண்டுகளுக்குப்பிறகு இப்போது திடீரென ஏன் புகார் கொடுக்கத் தோன்றியது?

அதற்கான சூழ்நிலை இப்போதுதான் அமைந்தது. எனக்குச் சட்டம் தெரியாது.

சிலருடைய தூண்டுதலின் பேரில்தான் புகார் கொடுத்ததாக பேச்சு நிலவுகிறதே?

அப்படி இல்லை.

சன் ரீ.வி. மீது சிலர் வேண்டுமென்றே புகார் கொடுக்கின்றனர். அதைப் பயன்படுத்தி நீங்களும் ஆதாயம் தேட முயற்சிக்கிறீர்களா?

அப்படி இல்லை.

நித்தியானந்தாவுடன் நீங்கள் இருந்த வீடியோக் காட்சி உண்மை இல்லை என்கிறீர்களா?

ஆமாம். அது ஜோடிக்கப்பட்டது.

சீ.டி.யும் அதில் உள்ள காட்சிகளும் உண்மைதான் என்று கர்நாடகா நீதிமன்றத்தில் அந்த மாநில பொலிஸ் நிரூபித்து அறிக்கை அளிக்கப்பட்டுள்ளதே?

அது சரியல்ல.

நீதிமன்றம் பொய் சொல்கிறது என்கிறீர்களா?

அந்த சீ.டி.யில் இருப்பது நான் இல்லை.

உங்களை பின்னால் இருந்து இயக்குவது யார்?

நானாகத்தான் இயங்குகிறேன்.

முதல்வரை சந்திக்கப் போகிறீர்களா?

வாய்ப்புக் கிடைத்தால் சந்திப்பேன்.

உங்கள் புகாரின் நோக்கம் என்ன?

அதையெல்லாம் சொல்ல முடியாது. பொலிஸ் ஆணையரிடம் கூறிவிட்டேன். அவர் நடவடிக்கை எடுப்பார்.

இவ்வாறு ரஞ்சிதா கூறினார்.

இதன் பின்னரும் சீ.டி. குறித்தும் புகார் குறித்தும் நிருபர்கள் சரமாரியாக கேள்வி கேட்டதால் குழப்பமடைந்த ரஞ்சிதா பேட்டியை பாதியில் முடித்துக்கொண்டு வெளியேறினார்.



இதேவேளை, நடிகை ரஞ்சிதாவுடன் இருந்த சீ.டி. வெளியான ஒன்றரை ஆண்டுக்குப் பின் பெங்களூர் சாமியார் நித்தியானந்தாவும் புதன்கிழமை சென்னை வந்தார். நட்சத்திர ஹோட்டலில் பேட்டி அளித்தார். அதன் விபரம் வருமாறு:



பெங்களூரில் உங்கள் ஆசிரமம் தாக்கப்பட்டது பற்றி பொலிஸில் புகார் செய்தும் நடவடிக்கை இல்லை என்கிறீர்களே. முதல்வர் எடியூரப்பா உதவவில்லையா?

நித்யா: நான் அதைப்பற்றி பேச விரும்பவில்லை.

லெனின் என்பவர் இந்த சீ.டி.யைப் பதிவு செய்து வெளியிட்டுள்ளதாக செய்தி வெளியானது. ஆனால், சன் ரீ.வி. மீது அடுக்கடுக்காகப் புகார் கூறுகிறீர்களே எப்படி?

சீ.டி. எடுத்தது வேறு ஆள் என்றாலும் ஒளிபரப்பியது இவர்கள்தான்.

பல சனல்களும் பல பத்திரிகைகளும் அந்தப் படங்களை வெளியிட்டு இருந்தாலும் சன் குழுமத்தை மட்டும் குறி வைப்பது ஏன்?

இவர்கள் தான் என்னை அழிக்க நினைத்தனர். பேரம் பேசினர்.

ஸ்ரீதர் என்பவர் பேரம் பேசியதாகச் சொல்கிறீர்கள். அவர் உங்களுடைய சட்டத்தரணியாக இருந்தவரா?

இருந்தார். ஆனால், நீக்கிவிட்டேன்.

ரஞ்சிதாவும் நீங்களும் இருக்கும் காட்சி உங்கள் அறையில் எடுக்கப்பட்டதா?

அது என்னுடைய அறை அல்ல.

வீடியோவில் இருப்பது நீங்களும் ரஞ்சிதாவும்தானே?

நாங்கள்தான். ஆனால், அவை தனித்தனியாக எடுக்கப்பட்டு மார்பிங் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்த ரஞ்சிதா வீடியோ பற்றிக் கேட்டபோது, உங்களுக்குப் பணிவிடை செய்ததாகக் கூறியுள்ளார். நீங்கள் ஒட்டு வேலை என்கிறீர்கள். இதற்கு ரஞ்சிதா என்ன பதில் சொல்கிறார்?

ரஞ்சிதா: அதையே ஏன் திரும்பத் திரும்பக் கேட்கிறீர்கள்? எத்தனை முறை நான் பதில் சொல்லுவது?

வெளியான சீ.டி. உண்மையா, இல்லையா? தெளிவான பதிலைச் சொல்லுங்கள்?

நித்யா: எனது வழக்கமான செயற்பாடுகளை எடுத்து ஆபாசக் காட்சிகளாக லெனின் அழகாக சித்திரித்துவிட்டார்.

இவ்வளவு நாள் ரஞ்சிதாவும் நீங்களும் தலைமறைவாகிவிட்டீர்களே? இப்போது பேட்டி கொடுக்க என்ன காரணம்? யாரும் உங்களை இயக்குகிறார்களா?

இல்லை, பயத்தில் இதுவரை வெளியே வரவில்லை.

எதைக் கேட்டாலும் பொலிஸார் சொல்ல வேண்டாம் என்று சொல்லியுள்ளதாகக் கூறுகிறீர்கள். அப்படி என்றால் பொலிஸார் உங்களை இயக்குகிறார்களா? அவர்கள் சொல்லித்தான் புகார் கொடுக்கிறீர்களா?

சில விடயங்களைச் சொல்லக்கூடாது என்று என்னிடம் கூறியுள்ளனர்.

சீ...என்று மேடையில் அநாகரிகமாக காறித் துப்புகிறீர்கள். இந்து சாமியாராக இருந்து கொண்டு கொஞ்சமும் பொறுமை இல்லாமல் இப்படி அநாகரிகமாக நடக்கலாமா?

நான் சாமியார் என்று நீங்கள் நம்பினால் தான் நீங்கள் பத்திரிகையாளர்கள் என்று நான் உங்களை நம்புவேன்.

இதைக் கேட்டதும் நிருபர்கள் அதிர்ச்சி அடைந்து அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றனர். ஒரே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. இதையடுத்து பெரும்பாலான நிருபர்கள் வெளியேறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# ஜிங்லுக் ஷினவத்ரா

வர்த்தகத்துறையில் தொடர் வெற்றிகளை கண்டுவரும் ஒரு பெண் தற்பொழுது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்ற அதேவேளை, தனது மூத்த சகோதரரும் முன்னாள் தாய்லாந்தின் பிரதமருமான தக்ஷின் ஷினவத்ராவின் பாதச் சுவடுகளை பின்தொடரவும் ஆரம்பித்துள்ளார்.

இவ்வாறான அடையாளத்தை கொண்டிருக்கும் ஜிங்லக் ஷினவத்ரா தான் இன்றைய இவ்வார மெயிலின் இவர் பகுதியின் நாயகி.

அரசியலில் பெண்களின் ஆதிக்கம் செறிந்திருக்கும் ஆசியப் பிராந்தியத்தில் மற்றுமொரு இளம் யுவதி அரசியலில் குதிக்கின்றார்.

வழமையில் பெண்கள் அரசியல் உச்சக் கட்டத்தை அடைவதற்கு படிப்படியான வளர்ச்சிகள் தேவைப்பட்ட நிலையில் ஜிங்லக்கின் அரசியல் பிரவேசம் சற்று ஆரவாரமாகவே உள்ளது.

காரணம், அரசியலில் பிரவேசித்த அதன் ஆரம்பத்திலேயே தாய்லாந்தின் பிரதமராவதற்குரிய தகுதியை அதாவது தேர்தல் வெற்றியை பெற்றிருக்கின்றார் ஜிங்லுக். தாய்லாந்தின் பிரதான எதிர்க்காட்சியான பியூ தாய் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் முதலிடத்தில் இருந்த ஜிங்லக் கடந்த மூன்றாம் திகதி நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்றிருப்பதன் மூலம் தாய்லாந்தின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையை தனதாக்கவுள்ளார்.

1967 ஜூன் 21 இல் பிறந்த ஜிங்லக் பாடசாலைக் கல்வியை தொடர்ந்து சியாங் மாய் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினையும் கென்ருக்கி பல்கலைக்கழகத்தில் பட்டமேற் படிப்பினையும் பொது நிர்வாகத் துறையில் மேற்கொண்டிருந்தார்.

பின்னர் சகோதரர் தக்ஷின் ஷினவத்ராவால் ஸ்தாபிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களுக்கு நிறைவேற்றதிகாரியாகவும் எஸ்சி அசற் நிறுவனத்தின் தலைவராகவும் அட்வின்ஸ் இன்போ சேவை நிலையத்தின் முகாமைத்துவப் பணியாளராகவும் பதவி வகிக்கின்றார்.

தக்ஷின் ஷினவத்ராவின் ஆட்சி இராணுவ புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்ட நிலையில் அவருடன் நெருக்கமான உறவை பேணிவந்த பியூ தாய் கட்சி 2011 பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக மே 2011 இல் ஜிங்லுக் ஷினவத்ராவின் பெயரை அறிவித்தது.

500 ஆசனங்களில் 265 ஆசனங்களை தம்வசப்படுத்திய பியூ தாய் கட்சியே அந்நாட்டின் வரலாற்றில் முதற்தடவையாக தனிப்பெரும் கட்சியாக அதிகப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் தகுதி பெற்றது.

அத்துடன் ஜிங்லக் ஷினவத்ராவும் பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனால் தேர்தலின்போதான சட்டச் சீர்கேடுகளை விசாரிக்க வேண்டி இருப்பதால் தேர்தல் முடிவுகளை இடைநிறுத்தியிருப்பதாக தேர்தல் ஆணையம் அறிவித்திருப்பது ஜிங்லக் உள்ளிட்ட பலருக்கு அதிர்ச்சியை தந்துள்ளது. 44 வயதையுடைய ஜிங்லக் இதற்கு முன்னர் எந்தவொரு அரச பதவிகளை வகிக்கவும் இல்லை. தேர்தல்களில் போட்டியிடவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் அவரது தேர்தல் வெற்றிக்கு சகோதரர் தக்ஷின் ஷினவத்ராவின் அரசியல் பின்புலம் பக்கபலமாக இருப்பதென்பதை நிராகரிக்க முடியாது. அதேவேளை ஜிங்லக்கின் வர்த்தகப் பின்புலம் கூட தேர்தல் வெற்றிக்கு மற்றுமொரு முக்கிய காரணமாக இருந்திருக்கலாம். அனுபவமற்ற அரசியல்வாதியான ஜிங்லக் மீது எதிர்மறையான விமர்சனங்களை கூறுவோருக்கும் குறைவில்லை.


இவ்வாறான விமர்சனங்களை வரவேற்புகள் என பல்வேறு விடயங்களுடன் தாய்லாந்தின் அரசியலில் பிரவேசிக்க காத்திருக்கும் ஜிங்லக் தக்ஷின் ஷினவத்ராவைப் போன்று செயற்படுவாரா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். அதேவேளை பலமான அரசியலை பின்புலமாக கொண்ட தக்ஷின் குடும்பத்திற்கு சர்வதேச ஆதரவும் உள்ளது.


அரசியல் மாற்றங்கள் எவ்வாறான தாக்கங்களை கொண்டு வந்தாலும் எதிர்மறையான விளைவுகள் மக்களை சென்றடையக் கூடாது.


யோ.நிமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவு பார்க்கும் பறவைகள்



விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியானது அனைத்து துறைகளிலும் பல நவீன மாற்றங்களுக்கு வித்திட்டுள்ளது. போர் மற்றும் உளவு பார்த்தலிலும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பண்டைய காலத்தில் உளவு பார்ப்பதற்கு பல்வேறு உத்திகள் கையாளப்பட்டன. ஒற்றர்கள் மூலம் உளவு பார்த்தல், பறவைகள் மற்றும் மிருகங்கள் மூலம் உளவு பார்க்கும் நடைமுறைகள் அக்காலத்தில் பின்பற்றப்பட்டன. அதன் பின்னர் செய்மதி மூலம் உளவு பார்க்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

தற்காலத்தில் அதைவிட மிக நுணுக்கமான முறைகள் கையாளப்படுகின்றன. அமெரிக்க இராணுவமானது இத்தகைய பல உளவு பார்க்கும் கருவிகளை தயாரித்துள்ளது. இவற்றை யாராலும் எளிதாக அடையாளம் காண முடியாத வண்ணம் அவை உருவாக்கப்பட்டுள்ளன. இவை உருவத்தில் பறவைகள் மற்றும் பூச்சிகள் வடிவிலும் காணப்படுவதால் அவற்றை அடையாளம் காண்பது எதிரிகளுக்கு சற்று கடினம்.


# அதிக பார்வைத்திறன் கொண்ட பூச்சியின் படிமங்கள் கண்டுபிடிப்பு

பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பூச்சிகள் அதிக பார்வைத் திறனுடன் இருந்திருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 51 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பூச்சியின் படிமம் அவுஸ்திரேலியாவில் கண்டறியப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவின் தென்பகுதியில் உள்ள கங்காரு தீவில் அடிலைடு பல்கலைக்கழகம் மற்றும் தெற்கு அவுஸ்திரேலிய அருங்காட்சியகக் குழுவினர் இணைந்து சமீபத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி மேற்கொண்டனர்.

இதில் 51.5 கோடி ஆண்டு பழமையான பூச்சியின் படிமத்தை கண்டுபிடித்துள்ளனர். இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது; பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உயிரினங்களின் பார்வைத் திறன் குறைவதாக இருந்திருக்கக்கூடும் என்று நம்பப்பட்டு வந்தது.

கங்காரு தீவில் கிடைத்திருக்கும் படிமத்தை வைத்துப் பார்க்கும் போது அவற்றின் பார்வைத் திறன் நன்கு இருந்திருக்க வேண்டும் என்பது நிரூபணமாகியுள்ளது.

தற்போது கிடைத்திருப்பது தட்டான் போன்ற பூச்சியாக இருக்கலாம் என்று தெரிகிறது. இவை கூட்டுக் கண் அமைப்பு கொண்டவை. இதன் கண்ணில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான லென்ஸ்கள் இருந்திருக்கலாம்.






தெள்ளத் தெளிவான பார்வையை அந்த வகைப் பூச்சி பெற்றிருந்திருக்கும். 54 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் ஏற்பட்ட மாபெரும் வெடிப்பு நிகழ்வுக்கு அப்புறம் விலங்குகள், பூச்சியினங்களின் பார்வைத் திறன் அதிகம் இருந்திருக்கலாம் என்று தெரிகிறது.

இது தொடர்பான ஆய்வு நடந்து வருகிறது. மனிதர்களின் கண்ணில் ஒரே ஒரு லென்ஸ் மட்டுமே உள்ளது. தற்போது இருக்கும் தட்டான் பூச்சியின் கண்ணில் சுமார் 30 ஆயிரம் லென்ஸ்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## தொழுநோய்க்கு ஆளாகும் உயிரினம்

பாலூட்டி உயிரினங்களில் மனிதனைத் தவிர தொழுநோய்க்கு ஆளாவது ஒரே ஒரு விலங்கினம்தான். அது, தென் அமெரிக்காவின் ஆர்ஜென்டினா தொடங்கி ஐக்கிய அமெரிக்காவின் கொலாராடோ வரை பரவிக் காணப்படும் ஆர்மடில்லோதான்.

அதுவும் டெக்ஸாஸ் மாநிலத்தில் ஆர்மடில்லோக்களுக்கு தொழுநோய்க் கிருமி பெருமளவில் பரவியிருக்கின்றதாம். தொழுநோய்க்குக் காரணமான மைக்கோபி சிலம் லெப்ரே எப்படி மற்ற எல்லா உயிரினங்களையும் தள்ளி விட்டு இப்படி மனிதர்களையும் ஆர்மடில்லோக்களையும் மட்டும் தாக்குகின்றன என்பது இதுவரையில் புரியாத புதிராகவே இருந்து வருகிறது. இதனால் மருத்துவ ஆய்வாளர்களின் கவனம் இந்த விசித்திரப் பிராணியின் மீது அதிகளவில் திரும்பியிருக்கிறது.

# வெள்ளை இரத்தக் குழந்தை

இரத்தத்தின் நிறம் வெள்ளை என்றால் நம்ப முடியவில்லை அல்லவா? ஆனால், பிறந்து 2 மாதங்களே ஆன ஒரு குழந்தையின் இரத்தம் வெள்ளையாக உள்ளது. [illegible] ஓர் அபூர்வ நோயால் பாதிக்கப்பட்ட அந்தக் குழந்தை ராஜஸ்தான் மாநிலத் தலைநகர் ஜெய்ப்பூரில் உள்ள ஜெய் கேலோன் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டது.

பால் போன்ற வெள்ளை நிற இரத்தத்தைக் கொண்ட இந்தக் குழந்தைக்கு டெல்லியில் உள்ள அகில இந்திய விஞ்ஞான மருத்துவக் கழக மருத்துவமனையில் விஷேட பரிசோதனை மேற்கொள்ள டாக்டர்கள் ஆலோசனை அளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# அரக்கன்

பா.திலகா, மேமலை, பதுளை.



அந்தி மாலை நேரம் குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. பூக்கள் மற்றும் மரங்கள் எல்லாம் காற்றின் இசைக்கேற்ப ஆங்காங்கே அசைந்து ஆடின. வேலை முடித்துக் களைப்புடன் மக்கள் வீடுகளுக்குச் சென்று கொண்டிருக்கப் பறவைகளெல்லாம் ஒலியசைத்துக்கொண்டு தத்தமது கூட்டை நோக்கிச் சென்றன. இருளும் அச்சூழலை சுழல அந்த ஒற்றையடிப் பாதையில் நடுத்தர வயதுடைய ஒரு உருவம் தள்ளாடிக் கொண்டு வந்தது. அந்த உருவத்தின் சொந்தக்காரர் வேறு யாருமல்ல முத்துதான். கையில் சாராயப் போத்தலும் பீடியும் இருக்கு சாரம்,மேற்சட்டை எல்லாம் கிழிந்து தொங்க வீடு வந்து சேர்ந்தான்.

"அடியே... கனகு உள்ளுக்கு என்னடி பண்ணுற. வெளியே வாடி சனியனே" என முத்து கர்ச்சிக்க பயத்துடன் கதவைத் திறந்தாள். திறந்து இரண்டு விநாடி கூடவில்லை கனகுவை உதைத்தான். கனகுவோ அடி தாங்க ஏலாமல் பொத்தென்று விழ கவிருயாவும் சுதனும் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தனர். தினமும் நடக்கும் விடயமானாலும் மனதுக்குள் பயம் குடிகொண்டிருந்தது. "என்னய்யா இது எந்தநாளும் குடிச்சிட்டு வந்து இப்படி எங்கல சித்திரவதை பண்ணுற. வயசுக்குவந்த பொண்ணு 13 படிச்சிட்டு வேலைக்குப் போக ரெடியாக இருக்கு பயலும் படிக்கிறான். நீ குடிச்சி காச செலவழிச்சா இதுகவுட்டு படிப்புக்கு நா எப்படி செலவழிப்பேன்" எனக் கண்ணீர் விட்டாள் கனகு.

"என்னடி சொன்ன நா சித்திரவதை பண்ணுறனே. உன்னை கட்டினேல் வந்து தான் எனக்கு புடிச்சது சனியன். மகாராணி மாதிரி பேசுற நாயே" எனக் கூறிக்கொண்டு அருகில் கிடந்த பலகையால் தலையில் அடித்தான். அவ்வளவுதான் அவளின் உயிர் இம்மண்ணை விட்டுப் பிரிந்தது.

"அட பாவி நீ நல்லாயிருப்பியா. உன்னையே சும்மா விட மாட்டேன்.வெளியே போ" என் கதறினாள் கவிநயா. தாயின் உடலை ஒருவாறு அடக்கம் பண்ணி ஈமக்கிரியைகள் தானாகவே செய்து முடித்தாள். பொலிஸ் வேலைக்கு விண்ணப்பித்தவள் அதுவரை தாயின் பணத்தில் தம்பியைப் படிப்பித்தாள். அந்தக் கால கட்டத்தில் தாயின் சாவுக்கு தந்தையும் அவரின் குடிப்பழக்கமே காரணம் என நிரூபிக்க அழைந்தாள். ஆனால் முத்துவோ மது உற்பத்தி செய்யும் பெருமாள் வீட்டையே தஞ்சமென்று புகுந்தான். பெருமாளும் பொலிஸாரிடம் பணம் கொடுத்து விசாரணையை முடக்கி விட்டான். ஆத்திரமடைந்த கவிநயாவும் சுதனும் அவனுடைய வீட்டைநோக்கிச் செல்கின்றனர்.

"அடேய் நீயெல்லாம் ஒரு பெரிய மனுசனா நீ நல்லாயிருப்பியா, உன்னால தான் ஊருல்லவங்கவுட்டு குடும்பமே நாசமா போவுது. எங்க வயிறு எரியுறமாதிரி உன் வீடு பத்திகிட்டு எரியும். இங்க பாரு உனக்கு பொம்பள புள்ளைங்க இருக்கு. அதுக என்னா பாடுபடுனு பார்த்துக்க" என மண்ணையள்ளி கவிநாய வீச "இங்கபாரு யாரு மேல வீசுற அவர் என்னை வாழ வைக்கிற சாமி" எனப் பாய்ந்து கொண்டு வந்தான் முத்து.

"வாய்யா பெத்த புள்ளைங்களையும் பெண்டாட்டியையும் ஒழுங்கா பார்க்க வக்கில்லை. உனக்கெல்லாம் ஒரு கல்யாணம். நீயெல்லாம் மனுசன். அநியாயமா எங்கம்மாவே கொண்ணுட்டியே" எனக் கத்தினான் சுதன். "அழாத தம்பி நம்ம பாவத்துக்குப் பதில் சொல்லியே தீரணும் வா போவம்" என இருவர் கண்ணீரும் கம்பலையுமாக வீடுவந்து சேர்ந்தனர்.

சுதன் பல்கலைக்லகழகத்திற்குச் சென்ற வேளையில் பெருமாளின் மகன் அருண் வீட்டுக்கு வந்தான். "இங்க பாருங்க உங்கள ஏசுறதுக்கு வரல. எனக்கு எங்க அப்பா செய்யுறது புடிக்கலைதான். ஆனா, அவர எதிர்த்துப் பேசுறு அளவு தைரியமில்லை. எங்க அப்பா செஞ்ச தப்புக்கு பரிகாரமா நா உங்கள திருமணம் முடிக்கலாமுன்னு நினைக்கிறேன்" என்றான் அருண்.

"இங்க பாருங்க உங்கல பிடிக்கலன்னு நான் சொல்லவரல. எனக்குனு இலட்சியம் இருக்கு. அது நிறைவேறினாதான் இது எல்லாம்" என்றாள் கவிநயா. "உங்க இலட்சியம் என்னானு எனக்குத் தெரியும். அதுவரைக்கும் உங்களுக்காகக் காத்திருப்பேன்" என்று அருண் கூறிவிட்டுச் சென்றுவிட்டான்.

ஒருவாறு இரு ஆண்டுகள் முடிந்தன. கவிநயா பொலிஸாகவும் சுதன் வக்கீலாகவும் ஊரில் வலம் வந்தனர். முதல் வேலையாக கவிநயா சாராயம் தயாரிப்பவர்கள், குடிப்பவர்கள் போன்றோரின் தகவல்களையும் ஆதாரங்களையும் திரட்டினாள். அதற்கு அருண் உதவினான். ஒருநாள் அனைவரையும் கைதுபண்ணினாள்.

"வாய்யா பெரியமனுசா வாய்கிழிய பேசுனே. உன்னால இந்த ஊருல எத்தின பேரு பாதிக்கப்பட்டிருக்காங்க தெரியுமா, உனக்கென்ன உனக்கு முக்கியம் காசுதானே. நீ நல்லா இருக்கனுங்குறதுக்காக மத்தவங்க வாழ்க்கையில் மண்ண அள்ளிப்போட்ட இல்லை. இப்ப நட ஸ்டேசனுக்கு" என்று கூறிக் கம்பீரமாக இழுத்துச் சென்றாள். ஊரே வேடிக்கை பார்த்தது. முத்துவையும் பெருமாளையும் இன்னும் சிலரையும் நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றனர். அங்கு வக்கிலாக சுதன் பேசினான்.

"கனம் மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே! மனிதனின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே பொருளாதாரம் பற்றாக்குறையாகவிருக்கும் நிலையில் போதைப்பொருள் விற்பது பாதக செயலாகும். பிள்ளைகளின் கல்வி,குடும்பத்தின் சந்தோசம் எல்லாம் சீரழிகின்றன. தந்தையிடம் எதிர்பார்க்கும் பாசம் அங்க தகர்ந்து எறியப்பட்டுள்ளது. இதே மாதம் இளைஞர் ஒருவர் குடித்துவிட்டு 13 வயது சிறுமியை சிதைத்த ஞாபகம் மறக்க இயலாது. அதுவே சான்றாகும். எனது தாயை மூர்க்கத்தனமாகக் குடித்துவிட்டு அழித்துக்கொன்ற கல்நெஞ்சக்காரனும் விசாரணையை முடக்கி விட்ட பெருமாளும் இதோ. இவர்களின் தண்டனை அனைவருக்கும் பாடமாக இருக்க வேண்டுமென" முடித்தான்.

"இந்த விசாரணையைப் பொறுத்த வரையில் மது என்ற கொடிய அரக்கன் அழிக்கப்படாததால் மனிதன் பல அவஸ்தைக்குள்ளாகின்றான். எனவே, இவர்களுக்குப் பெரிய தண்டனை வழங்க வேண்டும். பெருமாள் மட்டுமல்ல அனைவரின் சொத்துகளின் ஒரு பகுதியை ஏழைகளுக்கு கொடுப்பதோடு இவர்களுக்கு மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கிறேன்" என நீதிபதி கூற தாயின் ஆத்மா சாந்தியடைந்துவிட்டதென மகிழ்ந்து கொண்டு வெளியே வந்தனர்.

தூரத்தில் அருண் நிற்க. சுதன் "எனக்கு எல்லாம் தெரியும் போ" என்றான். அவ்வளவுதான் கவிநயா ஓடிச் சென்று மதுவைத் தொடமாட்டான் என்ற நம்பிக்கையில் அவனை அணைத்துக்கொண்டு தோளில் சாய்ந்தாள். அவளின் நம்பிக்கை வீணாகாது என்ற தோரணையில் புன்னகைத்தான் அருண்.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அடிமனசின் அழுகுரல்கள்...

ஆதவன் பார்த்திருக்க
அந்திப் பொழுதுகளில் நாம்
குந்தியிருந்து குதூகலித்த
முந்திரி தோப்பை நீ
எப்படி மறந்தாய்...?

ஓடைக்கரைகளில்
உதிரிப்பூ பொறுக்கி
வாடை கொஞ்சும் உன்
கூந்தலில் வைத்து நான் மகிழ்ந்ததை
வஞ்சியே நீ எப்படி மறந்தாய்...?
உனை சந்திக்காத நாட்களிலெல்லாம்
என் சிந்தனையே நீதானென்பதை
உருக்கமாக உனக்கெழுதி
அஞ்சலிட்டேனே உயிரே நீ
எப்படி மறந்தாய்...?

முழுநிலா காயும் நேரம்
மொட்டை மாடியோரம்
விரலோடு விரல் கோர்த்து
கதைபேசி நின்ற கணங்களை
காதலியே நீ எப்படி மறந்தாய்...?
அருந்ததி பார்த்து
அக்கினி சாட்சியாய்
ஆசையாயுன்னை கரம் பற்ற காத்திருந்தபோது
கடும் தீயாய் பிரிவைத் தந்து விட்டு
காணாமல் போன
காதலியே என் காதலை திருப்பித் தர மட்டும்
எப்படி நீ மறந்து போனாய்...?

**கொக்காகலை**
**கிருஷ்ணசாமி அருள்.**

## தயங்காமல் வா...

அன்பே நீ
முகத்திரை இட்டு என்
முன்னால் வந்தால் கூட
நீயே என் துணையென
முத்திரை இடுவேன்!

நீ யே... கனவில் கூட
வரவில்லை...
நிழலாக வருகிறாய்
நினைவில் நிலைக்கிறாய்
நிஜமாக வரவில்லை
நிம்மதியை கலைக்கிறாய்!

தொலைவில் இருக்கிறாய்
தொலைபேசியில்
அழைக்கிறாய்
நெருங்க மறுக்கிறாய்
நேசிக்க அழைக்கிறாய்!

பாசம் எனும் பெயரில்
வேஷம் போடுகிறாயா?
காதல் எனும் பெயரில்
கண்ணாமூச்சி
ஆடுகிறாயா?

சிந்திக்க தெரியவில்லை
எனக்கு சீர்கெட்டுவிட்டது
என் இதயத்துடிப்பு!

நீ விம்பமானால் கூட
உன்னை நம்பி நான்
நெருங்கி வருவேன்!

நீயோ மாயமாக
இருப்பதால்
என்னால் மறக்கவும்
முடியவில்லை
மறக்கவும் முடியவில்லை!

உன் உருவே என்
உயிருக்கு
எல்லை என்றாலும் நான்
உன்னைக் காண என்
மரண விளிம்பில் கூட
லயிக்க தயார்! இன்னும்
ஏன் தயக்கம்?

தயங்காமல் வா
தாமதம் ஆகும் போது
தவறுகள் பல நிகழ்ந்து
தண்டனை பெற வேண்டி
வரும் நமக்கு!
தயங்காமல் வா!

**பரகடுவ**
**கே.எம்.சம்ஸ்**

## பிரிவு



என்
வெற்றிடங்களை
தக்கவைக்க
மறந்துபோனது
உன் பிரிவு

என்
துயரங்களுக்கு
தூபமிட்டுப்
போனதும்
உன் பிரிவு

என்
பிரிவின்
கணங்களை
சுமந்து சென்றதும்
உன் பிரிவு...

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**

## எல்லையில்லா தேசம்

அன்பே உன்னை
நேசிக்கிறேன்
எவ்வளவுக்கு என்றால்
அது
கடலை விட ஆழமானதாய்
மலையை விட
உயர்ந்ததாய்
உலகுக்குக்கூட
ஓர் எல்லையுண்டு
நான் உன்மீது கொண்ட
உண்மைக் காதலுக்கு
மட்டும்
ஒரு எல்லையில்லை!
ஆகாயமும் என்
நேசமும் ஒன்று
உன் அன்பு ஒன்றே
நான் வாழும் மன்று
நிலவின்றி இரவில்லை
அதுபோல
நீயின்றி நானில்லை
நீதான் என் கனவு
நீதான் என் நினைவு
நீதான் என் பேச்சு
நீ என்னை விட்டுப்
பிரிந்து போனால்
நின்று விடும் என் மூச்சு

**செல்வநாயகம் ரவிசாந்**
**வீரமனை,குப்பிளான்**

## வாழ எத்தனி...?

வாழ்க்கை எனும்
நந்தவனத்தில்
பூத்திட்ட மலர்கள்
நாம்
முயற்சி எனும்
உணவை தினமும்
புசித்திட வேண்டியவர்கள்
நாங்கள்

சரிவுகள் என்பது
ஏற்றத்துக்கான
அறிகுறிதான்
அதைக்கண்டு
கலங்காதே

காற்றுக்கு வளைந்து
நிமிரும்
நெல்லைப்பார்
பின்னர் அது
நெல் மணியை தரவில்லையா

இந்த பாரில்
நானும் நீயும்
பிறந்திட்டோம்

எம் பாதைகள்
நேரானது அல்ல
என்பது நியதிதான்
அதற்காய்
நாமாகவே-எம்
பயணத்தை
முடித்திடலாமோ

கல்லும் முள்ளும்
வளைவும் நெளிவும்
உள்ளது தான்
பாதை என்பதை
புரிந்துகொள்

அந்த செம்பகத்தை பார்
மனித சலனத்தை கண்டு
மறைந்தும் வெளிப்பட்டும்
வாழவில்லையா?

அந்த தோழனை பார்

அவன் கால்கள்
முள்ளி மண்ணில்
புதைந்து போனாலும்
அவன் யாழ்.மண்ணில்
வாழவில்லையா?

உனக்கு எல்லாம்
இருந்தும் நீ
ஏன் அவசரப்படுகிறாய்
உன்னால் முடியும்
வாழ்க்கையில்
ஜெயித்திட

உனக்குமொரு
காலம் வரும்
காத்திரு
இப்படிக்கு
அன்புடன்
சகபாடி

## வன்னி நிலத்தவள்

கொடிமுல்லை பூக்கவில்லை
பாடும் குயில் சந்தோசத்தில்
பாடவில்லை
வீசுகின்ற மாருதமும்
இனிமையினை தரவில்லை
எழிலரசி வெதுப்பகமும்
எழில் இழந்து கிடக்கிறது
தலையிழ்ந்த தாலங்கள்
பசுமைக்காய் ஏங்குகின்ற
வயல் வெளிகள்
மேனியெங்கும் குண்டுபட்டு
பலமிழந்த பெருமரங்கள்
அன்று வயல்வெளி

தோட்டம் துரவு பேணி
விளைச்சல் கண்டவர்கள்
கடல் மீது ஏறிவந்து
கடல்படு திரவியம்
தேடியவர்கள்
இன்று ஐந்திற்கும் பத்திற்கும்
அலைகின்றார்.
இவை கண்டு தமிழ்த்தாய்
கண்ணீர் சொரிகின்றாள்.

**ஆ.முல்லைதிவ்யன்**
**பொலிகண்டி**
**வல்வெட்டித்துறை**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செக்ஸை விட அரவணைப்பே அதிக சுகம்



செக்ஸ் உறவை விட நிறைய முத்தமும் அரவணைப்புகளும் தழுவுதல்களும்தான் ஆண்களின் முக்கிய விருப்பமாக இருக்கிறதாம். அதேசமயம், பெண்களைப் பொறுத்தவரை செக்ஸ் உறவில்தான் அதிக நாட்டம் இருக்கிறதாம்.

இந்த வித்தியாசமான தகவலை ஒரு ஆய்வு முடிவு சொல்லியுள்ளது. இதுவரை இதை உல்டாவாகத்தான் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் ஆண்களுக்கு செக்ஸ் உறவை விட தங்களது காதலி அல்லது மனைவி தங்களுக்கு அதிக அளவில் முத்தமிடுவதையும் கட்டித் தழுவுவதையும் தான் அதிகம் விரும்புகிறார்களாம்.

அதேசமயம், பெண்களைப் பொறுத்தவரை அதிக அளவிலான செக்ஸ் உறவையே தங்களது துணைகளிடமிருந்து எதிர்பார்க்கிறார்களாம்.

ஒன்று முதல் 51 ஆண்டு காலம் இணைந்து வாழும் 5 நாடுகளைச் சேர்ந்த 1000 தம்பதிகளை இந்த ஆய்வுக்காகப் பேட்டி கண்டு அவர்கள் மூலம் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

ஆய்வு முடிவுகளின்படி திருமணமாகி 15 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துவிட்ட பெண்களுக்கு செக்ஸ் உறவு குறித்த நல்ல அறிவும் ஞானமும் ஏற்படுகிறதாம். இந்த விடயத்தில் ஆண்களை விட பெண்களுக்குத்தான் செக்ஸ் குறித்த முழுமையான ஞானம் இருப்பதாகத் தகவல் கூறுகிறது.

செக்ஸில் ஆண்களுக்கு எது அதிகம் பிடிக்கிது என்ற கேள்விக்கு நிறைய முத்தமும் கட்டிப் பிடிப்புகளும்தான் என்று பெரும்பாலான ஆண்களிடமிருந்து தகவல் கிடைத்துள்ளது. அடிக்கடி தங்களை மனைவியர் கட்டிப் பிடிப்பது மிகவும் பிடித்துள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்.

அதேசமயம், முத்தம் மற்றும் கட்டிப்பிடிப்புகளை பெண்கள் அதிகம் பொருட்படுத்துவதில்லையாம் மாறாக செக்ஸ் உறவுகளுக்கு அவர்கள் முக்கியத்துவம் தருகிறார்கள்.

என்னதான் கட்டிப்பிடிப்புகளும் முத்தங்களும் அதிகம் பிடித்தமானவையாக இருப்பதாக ஆண்கள் கூறினாலும் கூட செக்ஸ் உறவுகளுக்கும் அவர்கள் முக்கியத்துவம் தருகிறார்களாம். ஆணும் சரி, பெண்ணும் சரி செக்ஸ் உறவு என்பது நிம்மதியான மகிழ்ச்சியைத் தரும் அனுபவமாக அது இருப்பதாகப் பொதுவான கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வு இங்கு நடத்தப்படவில்லை. எனவே எம்மவர்களின் மன நிலை குறித்து அளவீடாக இதை எடுத்துக்கொள்ள முடியாது. இருந்தாலும் நீடித்த மகிழ்ச்சிக்கும் அளவில்லாத நிம்மதிக்கும் செக்ஸ் உறவு மட்டுமல்லாமல், சின்னச்சின்ன முத்தங்கள், அன்பான கட்டித் தழுவல்களும் அவசியம் தேவை என்பது முக்கியமானது.

## திருடனின் திகில் அனுபவம்

திருடனுக்கு தேள் கொட்டியதுபோல என்றொரு பழமொழி உண்டு. ஆனால், ரஷ்யாவைச் சேர்ந்த ஒரு திருடனுக்கு ஏற்பட்ட அனுபவம் வித்தியாசமானது. திருடப் போன இடத்தில் இளம்பெண்ணிடம் 3 நாட்கள் செக்ஸ் அடிமையாகி பிரமை பிடித்து பொலிஸுக்கு போய் நிற்கிறார் அவர். ரஷ்யாவைச் சேர்ந்தவர் விக்டர் ஜாசிஸ்கி. வயது 32. கடந்த வாரத்தில் காசு இல்லாமல் கையைக் கடிக்கவே மெஷ்சோஸ்க் என்ற இடத்தில் உள்ள ப்யூட்டி பார்லரில் திருட முடிவு செய்தார். உள்ளே நுழைந்து பணப் பெட்டியைத் தேடினார். அப்போது நடந்த எதிர்பாராத தாக்குதலால் கீழே விழுந்தார்.


அரை மயக்கத்துக்கு போன விக்டர், அதன் பிறகு வேறு மயக்கத்தில் இருந்து மீளாதவராக பொலிஸ் நிலையத்தில் இருந்தார். அவரை யாரும் பிடித்துக் கொடுக்காமல் புகார் கொடுக்கத் தானாகவே பொலிஸ் நிலையம் வந்திருந்தார். அவர் அங்கு பொலிஸிடம் அவர் அளித்த புகார் இது தான், பார்லருக்குள் நுழைந்ததும் யாரோ பலமாக தாக்க கீழே



சரிந்தேன். கராத்தே தெரிந்த பார்லரின் உரிமையாளரான இளம்பெண் அல்ஜா (வயது 28) என்னை வீழ்த்தினார்.

அரை மயக்கத்தில் இருந்து என்னை வேறு அறைக்கு இழுத்துச் சென்று 3 நாட்கள் செக்ஸ் அடிமையாக அடைத்து வைத்தார். உணவாக 'வயாகரா' மாத்திரை மட்டும் அளித்தார். பிறகு ரிலீஸ் செய்தபோது 'இது தான் உனக்குச் சரியான பாடம்' என்று எச்சரித்து அனுப்பினார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தப் புகாரை ஏற்ற பொலிஸார் ஆல்ஜாவை விசாரித்தனர். ''ஆம் திருட வந்தவனுக்கு பாடம் புகட்ட



முடிவு செய்தேன். ஓரிரு முறை உறவும் நடந்தது. விடுதலை செய்யும்போது புதிய ஜீன்ஸ், நல்ல உணவு, 1,000 கரன்சி நோட்டுகளும் கொடுத்து அனுப்பினேன்'' என்றார். என்ன செய்வதென்று தெரியாமல் முதலில் கையைப் பிசைந்த பொலிஸார் பிறகு திருட்டு முயற்சி குற்றத்தில் விக்டரையும் பாலியல் அத்து மீறல் புகாரில் ஆல்ஜாவையும் கைது செய்து தனித்தனி சிறையில் அடைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவுஸ்திரேலிய அணியின் இலங்கை சுற்றுப் பயணம்

| திகதி நேரம் | போட்டி | இடம் |
|---|---|---|
| ஆகஸ்ட் 06<br>10.00 AM | 1 ஆவது<br>ரி-20 | பல்லேகல<br>கண்டி |
| ஆகஸ்ட் 08<br>10.00 AM | 2 ஆவது<br>ரி-20 | பல்லேகல<br>கண்டி |
| ஆகஸ்ட் 10<br>10.00 AM | 1 ஆவது<br>ஒருநாள் | பல்லேகல<br>கண்டி |
| ஆகஸ்ட் 14<br>2.30 PM | 2 ஆவது<br>ஒருநாள் | ஹம்பாந்தோட்ட |
| ஆகஸ்ட் 16<br>2.30 PM | 3 ஆவது<br>ஒருநாள் | ஹம்பாந்தோட்ட |
| ஆகஸ்ட் 20<br>10.00 AM | 4 ஆவது<br>ஒருநாள் | பிரேமதாஸ மைதானம்<br>கொழும்பு |
| ஆகஸ்ட் 22<br>10.00 AM | 5 ஆவது<br>ஒருநாள் | பிரேமதாஸ மைதானம்<br>கொழும்பு |
| ஆகஸ்ட் 31 -செப்.4<br>10.00 AM | 1 ஆவது<br>டெஸ்ட் | காலி மைதானம்<br>காலி |
| செப்டெம்பர் 8-12<br>10.00 AM | 2 ஆவது<br>டெஸ்ட் | பல்லேகல மைதானம்<br>கண்டி |
| செப்டெம்பர் 16-20<br>10.00 AM | 3 ஆவது<br>டெஸ்ட் | பிரேமதாஸ மைதானம்<br>கொழும்பு |

# 'செலவைக் குறை'

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான தொடருக்கான செலவை இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சு மூன்று மடங்கால் குறைத்துள்ளது.

இலங்கை கிரிக்கெட்சபை மோசமான நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கையில் இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடருக்கான செலவாக 300 மில்லியன் ரூபாவை இலங்கை கிரிக்கெட் சபையின் இடைக்கால நிர்வாகம் மதிப்பிட்டிருந்தது.

எனினும் கிரிக்கெட் சபையின் நிதி நிலையையும் இத்தொடருக்கு ஏற்படும் செலவையும் கணித்த விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே 300 மில் லி



கமகேயிடம் சமர்ப்பித்திருந்தனர்.

எனினும் இந்தத் தொடர் மூலம் கிரிக்கெட் சபைக்கு 140 மில்லியன் ரூபாவே வரவாகக் கிடைக்குமென்பது கணக்கறிக்கைகள் மூலம் தெரியவந்ததையடுத்து, இத் தொடரை 90 மில்லியன் ரூபாவுக்குள் நடத்தி முடிக்குமாறு அமைச்சர் மகிந்தானந்த அளுத்க

பெரு மளவில் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும் 300 மில்லியன் ரூபா

யன்ரூபாசெலவை சுமார் மூன்று மடங்கால் குறைத்து 90 மில்லியன் ரூபாவாகக் குறைத்தார்.

இதன் மூலம் இலங்கையில் சுமார் ஒன்றரைமாதம் நடைபெறவிருக்கும் இந்தத் தொடரை மிகவும் ஆடம்பரமாக நடத்தாது சாதாரணமாக நடத்துவதென விளையாட்டுத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கேற்ப செலவுகளை கட்டுப்படுத்துமாறு புதிய இடைக்கால நிர்வாக சபைக்கு விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளிடையே மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதைவிட இருருவென்றி 20 போட்டியும் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடருக்கு 300 மில்லியன் ரூபா செலவாகுமென கடந்த இடைக்கால நிர்வாக சபை கூறியிருந்தது. இதற்கான கணக்கறிக்கையொன்றையும் அவர்கள் விளையாட்டுத் துறைஅமைச்சர் மகிந்தானந்த அளுத்

மகே உத்தர விட்ட நிலையில் அந்த கிரிக்கெட் சபையை கலைத்த அமைச்சர் புதிய இடைக்கால சபையை நியமித்து அதற்கு, இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்தத் தொடர் மூலம் 140 மில்லியன் ரூபாவே வருமானமாகக் கிடைக்குமென்பதால் முதலில் தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய போட்டிகளின் போது அன்பளிப்பு ரிக்கெட்டுகளை பெருமளவில் குறைத்து ரிக்கெட் விற்பனை மூலம் வருமானத்தை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன்போட்டி நாட்களில்முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் ஐந்து நட்சத்திர உபசரிப்புகளும் நிறுத்தப்படவுள்ளன. இதன் மூலம் பெருந்தொகை செலவைக் குறைக்க முடியுமெனவும் அமைச்சர் கருதுகிறார்.

இதைவிட அவுஸ்திரேலியாவுடனான தொடருக்கு பாதுகாப்புச்செலவாக முன்னைய கிரிக்கெட் சபை 50 மில்லியன் ரூபாவை கணிப்பிட்டிருந்தது. ஆனால் அமைச்சர் மகிந்தானந்த பாதுகாப்புச் செலவை ஒன்பது மில்லியன் ரூபாவாகக் குறைத்துள்ளார். தற்போது யுத்தம் முடிவடைந்து படையினர் பொதுப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருவதால் பொலிஸாரையும் படையினரையும் இதற்குப் பயன்படுத்துவதன் மூலம் பாதுகாப்புக்கான செலவை

செலவை 90 மில்லியன் ரூபா வாகக் குறைத்ததன் மூலம் இந்தத் தொடரை இலங்கை கிரிக்கெட் சபை சாதாரணமானதொரு தொடராக்கி அவுஸ்திரேலிய அணியை நெருக்கடிக்குள் தள்ளிவிடக் கூடாதென்பதில் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) கவனமெடுத்துள்ளது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபையின் புதிய நிர்வாகத்துடன் ஐசிசி.சி.யின் கணக்கியல் பிரிவு தொடர்பு கொண்டு இத் தொடருக்கான செலவீனங்கள் குறித்து ஆராய்ந்துள்ளது. எனினும் அவர்கள் இலங்கை கிரிக்கெட் சபையின் செலவீனக் குறைப்பு விடயத்தில் திருப்தியடைய வில்லையெனத் தெரிய வருகிறது.

இதேநேரம் இத் தொடருக்கான செலவை இலங்கை கிரிக்கெட் சபை 300 மில்லியன் ரூபாவிலிருந்து 90 மில்லியன் ரூபாவாக குறைத்துள்ள போதும் செலவு 200 மில்லியன் ரூபாவை எட்டுமென கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவுஸ்திரேலிய அணியுடனான தொடரென்பதால் தொலைக்காட்சி ஒளிபரப்பு, விளம்பரங்கள் மற்றும் அனுசரணையாளர்கள் மூலம் அதிகளவு பணத்தை சம்பாதிக்கலாமென இலங்கை கிரிக்கெட் சபை கருதுகின்றது. எனினும் இலங்கைகிரிக்கெட்டில் அரசியல் அதிகளவில் செல்வாக்கு செலுத்துவதால் இலங்கை கிரிக்கெட் சபையுடன் சுமுக தொடர்புகளை ஏற்படுத்த தொலைக்காட்சி நிறுவனங்களும், மிகப்பெரிய விளம்பர நிறுவனங்களும் பிரபல அனுசரணையாளர்க

ளும் பின்ன டித்து வருவதும் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் இந்தத் தொடர் குறித்து சர்ச்சைகள் எழும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் மனசில யாரு நிச்சயம் இல்லை நூறு




100 ஆவது சர்வதேச சதத்தைத் தொட இன்னும் ஒரே ஒரு சதம் மட்டுமே தேவை என்ற நிலையில் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தைத் தொடங்குகிறார் சச்சின். ஆனால், தன்னிடம் அந்தத் திட்டம் இல்லை என்றும் அணியின் வெற்றி மட்டுமே மனதில் இருப்பதாகவும் சச்சின் கூறுகிறார்.

ஒருநாள் போட்டிகளில் 48 சதங்களையும் டெஸ்ட் போட்டிகளில் 51 சதங்களையும் அடித்து அசைக்க முடியாத சாதனையுடன் வலம் வருகிறார் சச்சின். இரு போட்டிகளிலும் அவர் 100 ஆவது சதத்தைப் போட இன்னும் ஒரே ஒரு சதம் மட்டுமே பாக்கி. அதை இங்கிலாந்தில் தொடங்கவுள்ள கிரிக்கெட் தொடரின் போது சாதிப்பார் சச்சின் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிலும் முதல் போட்டியிலேயே அதை சச்சின் நிகழ்த்துவார் என்றும் எதிர்பார்ப்புள்ளது.

ஆனால், சச்சினோ அப்படியெல்லாம் எந்தத் திட்டத்துடனும் தான் களமிறங்கவில்லை என்கிறார்.

இது குறித்து இங்கிலாந்து பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில்,

நான் சாதனைகளைச் செய்ய வேண்டுமென்று நினைத்து ஆடுவதில்லை. மேலும் சாதனைக்காக நான் ஆடுவதும் இல்லை. அது வழியில் வருவதுதான். இந்த சுற்றுப் பயணத்தை சிறப்பானதாக மாற்ற வேண்டும் என்பதுதான் எனது திட்டம்.

இந்திய அணிக்கு இந்தத் தொடர் சிறந்ததாக இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். சாதனைகளைத் துரத்த ஆரம்பித்தால் நம்மால் சிறப்பாக செயல்பட முடியாதென்பது எனது எண்ணம். விளையாட்டை எப்படி அனுபவித்து விளையாடலாம் என்பது குறித்து மட்டுமே நான் சிந்திக்கிறேன்.

ஒருவர் விளையாட்டை அனுபவித்து விளையாடினாலே அதன் தரம் கூடும். சாதனைகளும் கூடவே வரும். அதுதான் முக்கியமானது. சாதனையை மட்டும் நினைத்து விளையாடினால் தரம் இருக்காது. யாருக்கும் பயனும் இருக்காது என்கிறார் சச்சின்.

சமீபத்தில் மேற்கிந்திய தீவுகளில் நடந்த கிரிக்கெட் தொடரில் சச்சின் பங்கேற்கவில்லை. மாறாக ஓய்விலிருந்தார். இருப்பினும் தற்போது முதல் ஆளாக இங்கிலாந்து போய் தீவிர பயிற்சிகளில் அவர் ஈடுபட்டுள்ளார். இதனால் இந்தியாவுக்காக சிறப்பான பங்களிப்பை அவர் வழங்குவார் என்று ரசிகர்கள் குஷியுடன் உள்ளனர்.

அதேசமயம், தனது முதல் போட்டியிலேயே சச்சின் தனது 100 ஆவது சதத்தை அடிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பும் ரசிகர்களிடம் ஏக்கமாகவுள்ளது.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் முதலில் நடைபெறுகிறது. முதல் டெஸ்ட் போட்டி 21 ஆம் திகதி லோர்ட்ஸில் தொடங்குகிறது. இந்த டெஸ்ட் போட்டி கிரிக்கெட் வரலாற்றில் 2 ஆயிரமாவது டெஸ்ட் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, வரலாற்றில் இடம்பெறப் போகும் இந்தப் போட்டியில் தனது 100 ஆவது சதத்தை சச்சின் அடிக்க வேண்டுமென்பது ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.

சச்சின் வழக்கமாக எதையும் சொல்லமாட்டார். ஆனால், செய்து காட்டுவார். இந்த நூறாவது செஞ்சரியையும் அவர் சொல்லாமல் கொள்ளாமல் போடுவார் என்று நம்புவோம்.

# தோனியின் முடிவு சரியானது




மேற்கிந்தியாவுடனான கடைசி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றிபெறும் வாய்ப்பிருந்த போதும் கப்டன் தோனி அந்த வாய்ப்பைக் கெடுத்துவிட்டதாகக் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

மேற்கிந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா 1-0 என்று கைப்பற்றியது. கிங்ஸ்டனில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா 63 ஓட்டத்தால் வெற்றிபெற்றது. பிரிட்ஜ்டவுன், டொமினிக்காவில் நடந்த 2 ஆவது மற்றும் 3 ஆவது டெஸ்ட் டிரா ஆனது. இந்த டெஸ்ட் தொடரை இந்தியா 2-0 என்று வெல்ல நல்ல வாய்ப்பிருந்தது.

கடைசி டெஸ்டில் இந்தியா வெற்றி பெற நல்ல வாய்ப்பிருந்தும் டிரா செய்யும் வகையில் இந்திய வீரர்கள் விளையாடினார்கள். இந்திய அணிக்கு 47 ஓவரில் (கூடுதலான 15 ஓவரையும் சேர்த்து) 180 ஓட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்திய அணி 32 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 94 ஓட்டம் எடுத்திருந்தபோது கப்டன் தோனி ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தார்.

கூடுதலான 15 ஓவரை ஆடுவதற்கு முன்னதாகவே ஆட்டத்தை முடித்துக் கொண்டார். 90 பந்தில் 80 ஓட்டம் தேவை என்ற நிலையிலிருந்தபோது ஆட்டத்தை அவர் முடித்துக்கொண்டது ஆச்சரியமளித்தது. வெற்றிக்காகப் போராடாமல் டிரா செய்யும் நோக்கில் அவர் இந்த முடிவை மேற்கொண்டார்.

டிரா செய்யும் வகையில்தான் ஆட்டத்தை முன்கூட்டியே முடித்தது சரிதான் என்று தோனி நியாயப்படுத்தினார். தொடரை கைப்பற்றுவதில் சிக்கல் ஏற்பட்டு விடக்கூடாது என்று கருதித்தான் இந்த முடிவை மேற்கொண்டதாக தோனி தெரிவித்தார். எனினும் முன்னாள் வீரர்களும் விமர்சகர்களும் இதனைக் கடுமையாக விமர்சித்து தோனியின் திறமை குறித்து கேள்வியெழுப்பியுள்ளனர்.

வெற்றிக்காக ஆடாமல் தோனி முன்னதாக ஆட்டத்தை முடித்தது சரியான முடிவுதான் என்று பயிற்சியாளர் டங்கன் பிளட்சர் நியாயப்படுத்தியுள்ளார்.

இந்த ஆடுகளத்தில் ஓட்ட இலக்கை நோக்கி ஆடுவது சவாலானது. 2 ஆவது இனிங்ஸை இந்தியா ஆடுவதற்கு முன்பே இதைத் தெரிவித்தேன். அதற்கேற்றவாறு ஓட்டமெடுக்க சிரமமிருந்தது. 40 ஓட்டம் எடுத்த துடுப்பாட்ட வீரரும் ஒரு ஓவருக்கு 3 ஓட்டம் எடுப்பதற்குச் சிரமமாகவிருந்தது.

அப்படிப்பட்ட ஆடுகளத்தில் ஒரு ஓவரில் 5 அல்லது 6 ஓட்டம் எப்படி எடுக்க முடியும். இதனால் ஆட்டத்தை முன்னதாக முடித்தது சரிதான். தொடரை கைப்பற்றியது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. துடுப்பாட்டத்தில் ராகுல் டிராவிட், வி.வி.எஸ்.லட்சுமண் சிறப்பாகச் செயல்பட்டதாகவும் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்கப்போகும் ஸ்பைடர் மேன்



ஸ்பைடர் மேன் படத்தையும் சூப்பர் ஹீரோ பீட்டர் பார்க்கர் பாத்திரத்தையும் ரசிக்காதவர்கள் மிகக் குறைவு.

குழந்தைகளின் எந்த நேரமும் விருப்பமான இந்த ஸ்பைடர்மேனின் வாழ்க்கை முடியப் போகிறது என்ற சமீபத்திய தகவலால் அதிர்ந்து போயிருக்கிறார்கள் ரசிகர்கள். ஸ்பைடர்மேன் உருவானது எப்படி? எப்படி இதை வடிவமைத்தார்கள் என்பதை முதலில் பார்ப்போம். ஸ்டான் லீ மற்றும் ஸ்டீவ் டிட்கோ ஆகிய இருவர்தான் இந்த ஸ்பைடர்மேன் கதை உருவாக்கிய கர்த்தாக்கள். ஆரம்பத்தில் இந்தக் கதை கொமிக்ஸ் புத்தகமாக வெளியாகிப் பரவலாகப் பலத்த பாராட்டுகளைப் பெற்றது. அமெரிக்காவின் புகழ்பெற்ற கொமிக்ஸ் இதழ் வெளியிடும் மார்வல் நிறுவனம்தான். 1963 முதல் இந்தப் புத்தகங்களை வரிசையாக வெளியிட்டது. 1963 இல் தொடங்கி மார்வல் வெளியிட்ட The Amazing spider-Man, Death Without Warning,Spider-Man No More காமிக்ஸ் புத்தகங்கள் வெளியாகி சக்கைபோடு போட்டன.

ஜான் ரோமிதா போட்டன், ஸ்பைடர்மேன் படங்களை வரைந்து கொடுத்து உயிரூட்டினார். வெறும் காமிக்ஸ் புத்தகமாகவிருந்த ஸ்பைடர்மேன் சினிமாவாக உலாவவிட்டது சொனி நிறுவனம். ஸ்பைடர்மேன் படம் வெளியான நாள் முதல் சிலந்தி மனித உடைகள் குழந்தைகளிடம் மிகவும் பிரபலமானது. தண்ணீர்ப் போத்தல் தொடங்கி பாடசாலை புத்தகப்பை, ரீ-சேர்ட் என சிலந்தி மனித உருவம் பொறித்த பொருட்கள் இன்றளவும் அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. இப்போது ஸ்பைடர்மேன் தொடரை எடுத்து வரும் சொனி நிறுவனம் ஸ்பைடர்மேனின் நான்காம் மற்றும் ஐந்தாம் பாகங்களை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

சரி விடயத்திற்கு வருவோம். ஸ்பைடர்மேன் சாகப் போகிறார். இதுதான் விடயம். ரொம்ப அதிர்ச்சியாக இருக்கிறதா? அடுத்த படத்திற்கு அதாவது ஸ்பைடர் மேன் நான்காம் பாகத்திறகு தி அமேஸிங் ஸ்பைடர் மேன் எனப் பெயரும் வைத்தாயிற்று.

ஸ்பைடர்மேன் சாகப்போவது குறித்து குட்டீஸ்கள் சில பேரின் கருத்தைக் கேட்போம் என் பிறந்த நாளுக்கு ஸ்பைடர்மேன் டிரெஸ்தான் வேணும்னு மம்மிகிட்ட அடம்பிடிச்சுக் கேட்டேன். மொட்டை மாடியில் நின்னுகிட்டு என் ஃப்ரெண்டஸோட சேர்ந்து ஸ்பைடர்மேன் மாதிரிச் சண்டை போடுவோம். எனக்கு அந்தளவுக்கு ஸ்பைடர் அங்கிளை ரொம்பப் பிடிக்கும். நிஜமாகவே அவரு சாகப்போறாரா? கவலையோடு சொல்கிறான் குட்டிப்பையன் அஸ்வின்.

அவரு நல்லதுதானே பண்றாரு. நிறையப்பேரை காப்பாத்துறத்துக்குத்தானே வர்றாரு. அவரை எதுக்குக் கொலை செய்யணும். ச்சோ... பாவம் அங்கிள் என்று வெள்ளந்தியாகப் பரிதாபப்படுகிறான் முதலாம் வகுப்பு படிக்கும் மாதேஷ். டேய்... ஸ்பைடர்மேன் சாகவே மாட்டாரு தெரியுமா... எங்க மம்மி சொல்லியிருக்காங்க... ஏன் நீங்க சொல்றது பொய்தானே என்கிறார்கள் அனுஷா, ப்ரியா,சாய்சிந்துஜா. போன படத்துல வில்லனோட ஸ்பைடர்மேன் எப்படி ஃபைட் பண்ணினாரு தெரியுமா... அவரு மட்டும் செத்துப் போயிட்டாருன்னா எல்லாரையும் யார் காப்பாத்துவாங்க... மாடியில் இருந்து கீழே விழுந்தாலும் அவர் பிழைச்சுக்குவார்... என்கிறாள் ஸ்வேதா.

ஸ்பைடர்மேன் செத்துவிடக்கூடாதே என்பது குட்டீஸ்களின் கவலை. வளர்ந்தவர்களுக்கும் ஸ்பைடர்மேன் பாத்திரத்தை சாகடிப்பது பிடிக்கவில்லை. தங்களின் சூப்பர் ஹீரோ இறக்கக்கூடாது என்றே நினைக்கிறார்கள். தி அமேஸிங் ஸ்பைடர் மேன் எல்லாவற்றுக்கும் விடை சொல்லும்.

# உப்பு மாவால் உலகப்புகழ் பெற்றவர்



மும்பையை சேர்ந்தவர் ப்ளோய்டு கார்டோஸ், (43) உயிர் ரசாயனம் குறித்த படிப்பை இவர் படித்ததால், இவரை விஞ்ஞானியாக்க ஆசைப்பட்டனர் பெற்றோர். ஆனால், கார்டோசுக்கு சமையல் கலை மீது கொள்ளை பிரியம்.

சமையல் படிப்பு பள்ளியில் பயின்றார். மும்பை தாஜ் ஹோட்டலில் முதல் நாள் பயிற்சிக்கு சேர்ந்த இவரை, 200 கிலோ வெங்காயம் உரிக்க சொல்லி கண்ணீரை வரவழைத்து விட்டனர். மூத்த சமையல்காரர்கள்.

இந்தியாவிலும் சுவிட்சர்லாந்திலும் பல்வேறு நாட்டு சமையல் தொழில் நுட்பங்களை கற்றுக்கொண்ட கார்டோஸ், நியூயோர்க்கில், கிரே குன்ஸ் என்ற தலைமை சமையல்காரரிடம் பன்னாட்டு சமையல் வித்தைகளையெல்லாம் கற்றுக்கொண்டார். இனியும் மற்றவரிடம் வேலை செய்யக் கூடாது, என்பதை உணர்ந்த கார்டோஸ், நியூயோர்க்கில் "தப்லா" என்ற பெயரில் ஹோட்டலை தொடங்கினார். இந்திய மசாலா வகைகளையெல்லாம் வெளிநாட்டு உணவு வகையில் கலந்து சமைத்தார். இதனால் இவருக்கு வாடிக்கையாளர்கள் கூடினர். வீட்டுக்கே சென்று உணவு வழங்குவது போன்ற பணிகளை தன்னுடைய ஹோட்டல் மூலம் செய்தார்.

இவரது திறமையை பாராட்டி, "புட் டி.வி." கடந்த 2007 இல் "மனிதநேய விருது" வழங்கி கௌரவித்தது. 2006 இல் சமையல் புத்தகங்களை வெளியிட்டார் கார்டோஸ். உடனடி சமையல், நான்கு நிமிட சமையல் போன்ற புத்தகங்களை, 2008 பெப்பிரவரியில் வெளியிட்டு பிரபல்யமானார் கார்டோஸ். நியூயோர்க்கில் கடந்த மாதம் நடந்த சர்வதேச சமையல் போட்டியில் பங்கேற்ற கார்டோஸ், சுவைமிக்க தென்னிந்திய உணவான உப்புமாவை சமைத்து, நடுவருக்கு பரிமாறி அவர் நாவில் எச்சில் ஊற வைத்து விட்டார். இதன் மூலம், 45 லட்ச ரூபா ரொக்க பரிசை வென்ற கார்டோஸ், இந்த பரிசு தொகையை புற்றுநோய்யால் பாதிக்கப்பட்டவர்களின் நலநிதிக்கு நன்கொடையாக அளித்து விட்டார். கார்டோசின் தந்தை புற்றுநோயால் இறந்ததால், அவரது நினைவாக இந்த நன்கொடையை அளித்துள்ளார் கார்டோஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













அஸ்மிதா சூட்

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 63 ஆம் இலக்கத்தில் 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org